1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

76-ம் புத்தகம் 27-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு ஆடி மாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## அவர் வந்திருக்கிறார்

வண. அருள் குழந்தைசாமி, S. J.

(முன்தொடர்ச்சி)

அவர்நின்றார். அவர்கள்நின்றார்கள். அவள்நின்றாள். ஒரு பார்வை. கனிந்தபார்வை. உள்ளத்தை ஊடுருவும் பார்வை. ஆனால் வார்த்தைகளோ கடின வார்த்தைகள். "இஸ்ராயேல் கோத்திரத்தினின்று சிதறிப்போன ஆடுகளிடத்திற்குஅனுப்பப்பட்டேனேயொழிய மற்றப்படியல்லவென்றார்." அவர்கள் ஆனந்தித்தார்கள். அவள் அங்கலாய்த்தாள். எனினும் அவர் 'போ' என்று துரத்தவில்லை. அவர்பார்வையில்இன்னும் இரக்கம்தோன்றுகிறது. அப்பார்வையில் ஒருஆறுதல். ஒருதூண்டுதல். ஒருஅனுதாபம். மனத்திடன் அவளைவிட்டு விலகவில்லை. கடினவார்த்தைகள் அவளை முறியடிக்கவில்லை. அவள் அஞ்ஞானி உண்மையே. அவள் இஸ்ராயேல் கோத்திரத்தைச் சேர்ந்தவளல்ல. அதுவும்உண்மையே. ஆனால், அவள் ஒரு பெண். துன்பத்தில் புதைந்து கிடக்கும் பெண். அவரிடம் தஞ்சமென்று வந்திருக்கிறாள். ஒரேபிடியாய் "அவள் வந்து, அவரை ஆராதித்து, ஆண்டவரே! அடியாளுக்கு உதவிசெய்தருளும்என்று மன்றாடினாள்." (மத். 15-25)

"கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள்திறக்கப்படும்; தேடுங்கள் அகப்படும்" என்றார்அவர். இங்கே அவள்கேட்கிறாள். அவர் கொடுக்கவில்லை. அவள் அவர் இருதயத்தைத் தட்டுகிறாள். அவர்திறக்கவில்லை. அவள் அவர்உதவியைத் தேடுகிறாள். அவர்அகப்படச் சம்மதிக்கவில்லை. தஞ்சமென்று வந்தவளுக்குத் தயை காண்பிப்பதற்குப் பதில் கடுஞ்சொற்களை அடுக்கினார். நாய்க்கு அவளை ஒப்பிட்டார். "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்களுக்குப்போடுவது நல்லதல்ல"என்றார். என்ன கடூரமான வார்த்தை! சுயமதிப்புள்ள எந்தமனிதரும் அவ்விடத்தைவிட்டு அகன்றுபோய்விடுவர். ஆனால், அவளா? அவரே என்று சரணடைந்த அவளா? "ஆண்டவரே! சரிதான். ஆகிலும் நாய்க்குட்டிகளும் தங்கள் எசமான்களுடைய மேசையில் இருந்துவிழுகிற உரொட்டித்துண்டுகளைத் தின்குமே என்றாள்."

இனிமேல் அவரால் தாங்காது. இத்தனைநேரம் இறுகியஇருதயமுள்ளவராக இருந்தது போதும். இனிமேல் முடியாது. ஒரேஉணர்ச்சிவெள்ளம் பெருக்கெடுத்து ஓடிற்று. "ஓ, ஸ்திரீயே! உன்விசுவாசம் பெரிதாயிருக்கின்றது. நீ விரும்பினபடியே உனக்கு ஆகக்கடவது! இந்தவார்த்தையினிமித்தம் நீ போ. பசாசு உன்மகளைவிட்டுப் போய்விட்டது." அவள்நம்பினாள். நன்றிசெலுத்தினாள். வீடு சென்றாள். "சிறுபெண் மஞ்சத்தின்மேல் படுத்திருக்கிறதையும், பசாசு போய்விட்டதையுங் கண்டாள்."

அவளுடைய மன்றாட்டு! அவரது அலட்சியமனப் பான்மை இதுவும் அவரது விளையாட்டே! அவர்நம்மோடு விளையாடுகிறார். தாய் தன்பிள்ளையை ஏமாற்றுகிறதுபோல் நமது விசுவாசத்தைச் சோதிக்கிறார். நாம்எடுக்கும் கருமத்தில் நிலைத்துநிற்கிறோமாஎன்று பார்க்கஆசிக்கிறார். நாமோ சோர்வுகொள்ளுகிறோம். நாம் செபத்தில்கேட்பவை சகலமும் ஆகாயக்கப்பலில் வந்து சேரவில்லையேஎன்றுஅங்கலாய்ப்படைகிறோம். கேளுங்கள் கொடுக்கப்படும் என்றவர் கேட்கும்முதல்நிமிஷமே கொடுக்கப்படுமென்று சொன்னாரா? தட்டினமுதல்சமயமே திறக்கப்படும்என்றாரா? நாம்இவைகளை மறந்துவிட்டுச் செபத்தில் மனச்சோர்வடைகிறோம். நம்பிக்கையை இழக்கிறோம்.

அவளுடையசெபத்தைக் கவனியுங்கள். அது தாழ்ச்சிநிறைந்தது. நாய்க்குட்டிக்கு ஒப்பிட்டும் சலிக்கவில்லை.—விசுவாசம் நிறைந்தது. அவர்மேல் பூரண விசுவாசம் இருந்ததால்தான் "ஆண்டவரே, இரக்கமாயிரும்" என்று அவரைப் பின்சென்றாள்.—அன்புநிறைந்தது. சுயநலத்தை நாடவில்லை. தன்மகளின் சுகத்தை வேண்டினாள். விடாமுயற்சியுடன் செய்யப்பட்ட செபம். கடைசிவரையிலும் அவரை அவள்விடவில்லை. சீஷர்கள் திட்டினார்கள். துரத்தினார்கள். அவர் அலட்சியம்செய்தார். நாய்க்கு ஒப்பிட்டார். ஆனால், அவள் ஒரேபிடியாய் நிலைத்து நின்றாள். இத்தகையசெபத்தைக் கேட்டபின் இளகியஇருதயத்தைக்கொண்ட அவர் சும்மாவிருக்கமுடியுமா? (இ-து.)

## தலைவில்லுத் திருசேத்திர மகாத்மியம்

இலங்கையிலுள்ள கத்தோலிக்க மக்களின் யாத்திரைத் தலங்களுள் அற்புதவரத்தியான அர்ச். ஆனாள் முனீஸ்வரி கிருபாசனங் கொண்டெழுந்தருளியிருக்கும் தலைவில்லுத் திருசேத்திரமும் மிகவிசேடம் பெற்றதாகும். இத்திருத்தலம் கற்பிட்டிக் குடாநாட்டில், புத்தளத்திலிருந்து கற்பிட்டிக்குச் செல்லும்பாதையில், 16-வது மைலிலிருந்து தென்மேற்கே சுமார் 2 மைல் தூரத்தில், இந்துமகாசமுத்திரக் கரையோரமாகக் காட்சியளிக்கின்றது.

இங்கு ஆண்டுதோறும் ஆடி மாதஇறுதியில் நடைபெறும் திருவிழாவிற்குத் தேசத்தின் பலபாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கானமக்கள்சாதி,சமய பேதமின்றி வந்துகூடுவர். பங்குனி, மார்கழி மாதங்களில் நடைபெறுகின்ற உற்சவங்களுக்கும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சமூகமளிப்பர். வைபவகாலங்களில் மட்டுமன்றி மற்றையநாட்களிலும் யாத்திரீகர் வந்தவண்ணமாகவே யிருக்கின்றனர்.

தென்னந் தோப்புகளாலும், பத்தனைக் காடுகளாலும் சூழப்பட்ட சனசஞ்சாரமற்ற இத்தலைவில்லுக் கிராமமானது வைபவகாலங்களில் கடைவீதிகளும், இல்லங்களும், காரியாலயங்களும், சனத்திரளும், மோட்டர்வண்டி மாட்டுவண்டிப் போக்குவரத்துகளும் நிறைந்த நவீனநகரம்போலச் சிறப்புற்று விளங்கும். ஆலயத்தின் உள்ளும், புறமும் பலவர்ணப் புஷ்பங்களாலும், பட்டுப்பீதாம்பரங்களாலும், மின்சாரதீபங்களாலும் அலங்கரிக்கப்பட்டுச் செகசோதியாகக் காட்சியளிக்கும். இத்திருப்பதியைத் தரிசித்து அர்ச். ஆனாள் முனீஸ்வரியின் அருட்பிரவாகத்தைப் பெற்றுச் செல்லும் பக்தர்கள் அனந்தம். தம்மைத்தஞ்சமென நம்பி வந்தோர்க்குத் தாயார் செய்யும் அற்புதங்களும் அனந்தம்.

இத்தகைய புனிதமான திருசேத்திரத்தின் அற்புதவரலாற்றைப்பற்றி 1867-ம்ஆண்டு திரு. டபிள்யூ. ஸி. மெக்றெடி என்பவர் எழுதிவைத்த உத்தியோக பூர்வமான அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: 17-ம் நூற்றாண்டிலே மன்னாரிலிருந்து கொழும்பை நோக்கிக் கட்டுமரத்தின் மூலம் பிரயாணஞ்செய்த ஒரு ஏழைப்போர்த்துக்கீசியன் களைப்புமிகுதியினால் கடற்கரையோரத்தில் சுமார் 200யார் தூரத்தில் காணப்பட்ட ஒரு பெரிய முதிரைமரத்தின் நிழலில்வந்து ஒதுங்கியிருந்தான். அவன் தனது ஆயாசத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு நீட்டிநிமிர்ந்து படுத்து அயர்ந்து நன்றாகத் தூங்கிவிட்டான். அவ்வேளை மரத்தின் அடியில் தீப்பற்றியெரிவதாயும், அத்தீச்சுவாலையின்நடுவே அர்ச்சியசிஷ்ட ஆனாள் முனீஸ்வரி காட்சியளிப்பதாயும் கனவு

**************************

வி. எஸ். பிள்ளை

**************************

கண்டு திடீரென விழித்துக்கொண்டான். கொண்டதே,அச்சம்மேலீடச் சத்தமிட்டுச் செபிக்கத் தொடங்கினான். நீண்டநேரஞ் செபித்தபின் தன்முன் தோன்றிய பிரபையைக்கண்டு அதிசயமுற்று ஏறிட்டுப் பார்த்தான். சோதியின் நடுவில் தாயார் உண்மையாகவே காட்சியளித்துக் கனிந்தபார்வையுடன் இனியகுரலில் அவனை நோக்கி: "மகனே! கூடியகெதியில் என் பெயரால் இவ்விடத்தில் ஓர் ஆலயத்தை நிறுவுவாய்!"என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்துபோனார். இதைக்கேட்ட ஏழைப் போர்த்துக்கீசியன் ஆச்சரியமும், பீதியுங்கொண்டான். உடனே ஓடோடியுஞ்சென்று கற்பிட்டிக்கணித்தாயுள்ள குறிஞ்சம்பிட்டியென்னும் குக்கிராமத்தில்வசிக்கும் கடற்றொழிலாளர்களின் உதவியைப் பெற்று ஓலையுந் தடியும் தேடிச் சென்று சிலநாட்களுக்குப்பின் சிறுகுடிசைக்கோவில் ஒன்றைக் கட்டினான்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### யூதர்களின் பாராட்டுரை

பிரான்சிலே, தூலூஸ் நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் சாலியேஜ் ஆண்டவர் சமீபத்திலே தமது மேற்றிராணித்துவ வெள்ளியூபிலியைக் கொண்டாடியபோது, பிரான்ஸ் தேசத்தை ஜேர்மனியர் அடிப்படுத்தியிருந்த காலத்திலே யூதர்களின் உயிரைக் காத்துவைக்குமாறு அவர் காண்பித்த வீரத்துவத்தை ஞாபகத்துக்குக் கொணர்ந்து அமெரிக்க யூதர் கழகம் அவருக்குச் சோபன வாழ்த்துகள் அனுப்பிவைக்கலாயிற்று. "அந்தகாரம் நிறைந்த அக்காலத்திலே ஆத்மீக சன்மார்க்கத்தின் மகாஉன்னத தத்துவங்களை அனுபாலனஞ்செய்தும், ஒன்றும் அறியாத எண்ணிறந்த மனிதஉயிர்களைப்பாதுகாத்தும், மனுத்தன்மையற்ற வன்கண்மையைத் தாங்கள் வீரபராக்கிரமத்தோடு எதிர்த்தும் நின்றதை நாம் மிகுந்த வியப்போடும், நன்றியறிதலோடும் இந்த வேளை ஞாபகப்படுத்துகின்றோம்" என்று பால்த்திமோர் நகரின் பிரபல யூதகைத்தொழில் தலைவரான திரு. ஜேக்கப் புளோஸ்ரீன் அவர்கள் எழுதியிருக்கின்றார்.

### நான் ஓர் கத்தோலிக்கனாய்...

தமது படுக்கையில் இருந்துகொண்டுதானே தினமும் சிலுவைப்பாதைசுற்றித் தமதுமரணத்துக்கு ஆயத்தஞ்செய்துவந்தபின் பிறேசில் நாட்டுக் 'கான்ஸர்' அதாவது புற்றுநோய் நிபுணரான 36 வயசுடைய டக்றர் ஞெட்றிக்குஸ் லோறியானோஅவர்கள் தம்மைப்போலப் புற்றுநோய்கண்டு வருந்துகிறவர்களுக்கெல்லாம் பின்வரும் ஆறுதலான செய்தியைவிடுத்துச் சமீபத்திலே அங்கு றையோடி ஜனேய்றோ நகரில் காலஞ்செல்லலாயினர்.

"யேசுக்கிறீஸ்துநாதரைத் தேடுங்கள். அவரே ஏகஇரட்சணியமாய் இருக்கிறார். வைத்தியசாஸ்திரசாதனங்கள் நமக்குப் பிரதிகூலமாகும்போது ஞானத்தைரியமும், சமாதானமும் நமக்கு அருளுகிறவர் அவரே. காலம்வரும்போது அவநம்பிக்கைப்படாதீர்கள். ஏனெனில், தேவன் தமது அனந்த நன்மைத்தனத்திலே உங்களோடு கூடவிருப்பார். எனக்கு விசுவாசம் இல்லாவிடின் நிச்சயமாகவே நான் அவநம்பிக்கைக்குள்ளாய் இருப்பேன். ஆனால், நான் ஓர் கத்தோலிக்கனாய் இருப்பதாலே தேவசித்தப்படி ஒவ்வோர் காரியமும் சுபாவமானதாகவேதோற்றுகின்றது. உங்கள் விசுவாசத்தை அதிகரித்துக்கொள்ளுங்கள். தேவனை நெருங்கிநில்லுங்கள்" என்பதே.

டக்றர் லோறியானோ அவர்கள் தமது மரணப்படுக்கையில் இருந்துகொண்டுதானே புற்றுநோயின் குணங்களை நிதானித்து அறிவதற்கும், அதன் சிகிச்சைக்குமாக அதிகஞ்சிறந்த சாதனங்கள் அருளப்படுதற்கான இயக்கம்ஒன்றை ஆரம்பித்தார். அதனை யாவரும் ஆதரிக்குமாறு தூண்டிப் பத்திரிகைகளும், றேடியோவும் அவருக்கு உதவியாக முன்வந்தன. அந்நாட்டின்பிரசாதிபதியான வார்காஸ் அவர்களின் ஆதரவைப்பெற்று அதற்குரிய ஓர்ஸ்தாபனம் அடியிடப்பட்டது. தமது முயற்சிகள் அனுகூலமாயினவென்று தமக்குச்சொல்லப்பட்டபோது" "இப்போதுநான் மனப்பாக்கியமாய்ச் சாகமுடியும்" எனக்கூறலாயினர்.

### மெக்சிக்கோவில் திருச்சபை

மெக்சிக்கோநாட்டில் வேதகலாபனை நடந்தகாலத்திலே பாடசாலைகளில் ஊட்டப்பெற்ற லௌகிக கல்வியால் ஏற்பட்ட தீமைகளை ஒழித்துககட்டுமாறு வேதகல்வி பயிற்றும்வேலை தீவிரமாக நடைபெற்றுவருகிறது. அங்கு மெக்சிக்க தலைநகரில் மாத்திரம் இரண்டாயிரம் உபதேசிமாருக்குமேல் இப்பணியில் ஈடுபட்டு 48,000 பிள்ளைகளுக்குக் கிரமமாக ஞானோபதேசம் படிப்பித்து வருகின்றனர். அப்போது செய்யப்பட்ட வேதவிரோதசட்டங்கள் இன்னுமே அழிக்கப்படாதிருந்தபோதிலும் தற்போதைய அலெமன் பிரசாதிபதியின் ஆட்சியிலே அவைகள் கண்டிப்பாக அனுசரிக்கப்படுவதில்லை.

1934-ம்ஆண்டு முதல் 1940-ம் ஆண்டுவரையிலே கார்டெனஸ் பிரசாதிபதியின் ஆட்சியிலும், அதற்குமுன் 1924-ம்ஆண்டு முதல் 1928-ம்ஆண்டு வரையிலே கலேஸின் ஆட்சியிலும் அநேககுருமாரும், கத்தோலிக்கரும் கொலை செய்யப்பட்டார்கள். திருச்சபைச் சொத்துகள் அரசாங்கத்தாலே பறிமுதலாக்கப்பட்டன. அந்நாட்டிலிருந்து கத்தோலிக்க திருச்சபையை முற்றமுடியக் களைந்துவிடுமாறு முயற்சி செய்யப்பட்டும் எல்லாம் பிரதிகூலமாயிற்று. இன்று திருச்சபைக்கும், அரசாங்கத்துக்குமிடையே இருந்துவரும் உறவு மிகவும் சாந்தமானது. அப்போஸ்தலிக்க ஸ்தானபதியாய்ப் பியானி அதிமேற்றிராணியார் மெக்சிக்கநகரில்வசித்துவருகின்றார். இவருக்கு முன்னிருந்த ஸ்தானபதிகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்கள்.

விசுவாசிகளை ஞானவிசாரணை செய்துவரும் குருமார் தொகை அங்கு சராசரி பதினாயிரம் பேருக்கு ஒருவர் விகிதமாய் இருந்தபோதிலும் குருமடங்களில் அநேக மாணவர்கள் சேர்ந்துவருகின்றனர். யேசுசபைக் குருமார் சர்வகலாசாலைக் கலாசார நிலையம்ஒன்றை நிறுவியிருக்கின்றனர். கத்தோலிக்க சேவாசங்கத்தில் 3,45,000 அங்கத்தவருக்குமேல் இருந்துவருகின்றார்கள்.

புத்தகமதிப்புரை

## முத்திப்பேறுபெற்ற 10-ம் பத்திநாதர்

ஆசிரியர்: ஆர். பி. குழந்தைசாமிப் பிள்ளை — தமிழ்இலக்கியக் கழகம், தூத்துக்குடி — விலை ரூபா 2. பக்கம் 244.

நிகழும் ஆனிமாதம் 3-ம்தேதி ஞாயிறுவாரம் 10-ம்பத்திநாத பாப்பானவர் ஞானஸ்நானம்பெற்ற நூற்றாண்டுவிழா. இச்சுபதினத்திலே உரோமைமாநகரில் பரிசுத்தபிதா 12-ம்பத்திநாத பாப்பரசர் அவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளலாயினர். கத்தோலிக்க உலகமுழுவதும் அன்று ஆனந்தபாஷ்பம் சொரிந்து, தேவனுக்கு நன்றியறிந்த தோத்திரம்புரிந்து அகமகிழ்ந்தது.

இப்பரிசுத்த பாப்பரசரின் சரிதையைப் பண்டிதர்பாமரர் முதலாம் யாவருக்கும் பயன்படும் பொருட்டு எளிய இனிய தமிழ்நடையில்எழுதி இடையிடையே சமயோசிதமான மேற்கோள்களையும், உதாரணங்களையும் கூட்டிச்சேர்த்து வாசிப்பவர்களின் பொதுஅறிவு விசாலிக்கவும், ஓய்வுநேரம் உல்லாசமாய்ப்போகவும், பாஷாபிமானம், தேசாபிமானம் அதிகரிக்கவும் தக்கதாக அரும்பிரயாசையெடுத்து உதவிய நூலாசிரியர் திரு. ஆர். பி. குழந்தைசாமிப்பிள்ளை அவர்களே. அப்போது இதற்கு முகவுரையெழுதிய மகாவந். தூத்துக்குடி மேற்றிராணியாண்டவர் சொல்லுகிறதாவது: "சத்திய திருச்சபையில் குன்றின்மேலிட்ட தீபங்களுக்கு ஒப்பானபரிசுத்தவான்கள் எக்காலத்திலும் விளங்குவார்கள் என்பது தேற்றம். இவ்வாறு மங்காஒளியுடன் பிரகாசித்துப் பரமபிதாவை மகிமைப்படுத்திக் கிறீஸ்துவில் சகலத்தையும் புதுப்பித்து அர்ச்சியசிஷ்டதனத்தின் சுகந்தவாசனையுடன் மரித்தவர் பரிசுத்தபிதா 10-ம்பத்திநாதர். இவர் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர். கஷ்டப்பாடுபட்டுக் கல்விகற்றவர். குருப்பட்டம்பெற்று ஓர் சிற்றூரின் பங்குக்குருவானவருக்கு அடியில் ஓர் உதவிக் குருவென்கிற கடைசிப்படியிலிருந்து படிப்படியாய் ஏறி உச்சநிலைக்குவந்து மும்மகுடம் புனைந்து யேசுஇராசாவின் பிரதிநிதியாக அர்ச். இராயப்பருடைய சிம்மாசனம் ஏறித் துஷ்டநிக்கிரகம் சிஷ்ட பரிபாலனம்செய்த பரிசுத்த பார்த்திபன் இவர். இவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் கொடுப்பதற்குத் தீவிரமான முயற்சிகள் நடக்கிறதென்பது உலகப்பிரசித்தம்." இதுவிஷயத்தில் ஐந்துகாயவரம்பெற்று அன்னபானமின்றி அற்புதமாய்ச்சீவிக்கும் புண்ணியமாது தேரேசா நியூமன் சொல்வாள்: "பரிசுத்தபிதா 10-ம் பத்திநாதர் உத்தரிக்கிறஸ்தலத்துக்குப்போகவில்லை. நேரே மோட்சம்போய்ச் சேர்ந்தார். இவர்மேல் திவ்வியயேசுவுக்கு மெத்தப்பிரியம். இவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் கொடுக்கப்படும் என்பது திண்ணம். இறுதியாக, நற்கருணையின் பாப்பரசர் நவீன போதனைகளை நொறுக்கியவர், திருச்சபைச் சங்கீதத்தையும், சட்டதிட்டங்களையும் சீர்திருத்திய சுத்தவீரர், தாழ்ச்சியும் சாந்தகுணமும்வாய்ந்த பரிசுத்தவாளர் என்று காலாகாலத்துக்கும் புகழப்படும் நமது அன்பார்ந்த ஞானத்தந்தைக்குக் கூடியசீக்கிரம் முத்திப்பேறு பெற்றபட்டமும் அர்ச்சியசிஷ்டபட்டமும் கிடைத்து, நாம் அவருடைய சுரூபத்தை நமது பீடங்களில் அமைத்து, அவருடைய சாகசச் செயல்களுக்காக அவரை வாழ்த்தி அவருக்கு இத்தனை கருணை புரிந்த இறைவனுக்கு நன்றிசெலுத்தும் நேரம் நெருங்கிவரும்படியாக யாவரும் [illegible] இருதய இராசாவை [illegible] மன்றாடுவார்களாக." என்பதே. இந்த அருமையான நூலைக் கத்தோலிக்க தமிழ்மக்கள் அனைவரும் பெற்றுப்படிப்பதாலே பெரும்பயன் எய்துவார்களெனலாம்.

Mal. No. 489. Eng.

## பொதுசன சுகாதார பாதுகாப்பு

ஓர்சனத்தின் சுகாதாரத்தைக்காட்டிலும் ஒருவர்சிந்திக்கக்கூடிய விலையேறப்பெற்றசெல்வம் வேறில்லை. அதனால் உலகமுழுவதிலுமே நாகரீகம் படைத்ததேசங்களின் அரசாங்கங்கள் பொதுசன சுகாதாரத்தை அபிவிர்த்திசெய்வதும், பாதுகாப்பதும் தங்கள் கடமையின் மகாவிசேஷப்பட்ட பகுதிகளில் ஒன்றெனக்கருதுவது அதிசயமன்று.

ஆயாசத்தைப் பறுவாய்பண்ணுதலும், அதிகம் புகழ்ச்சிக்குரியதுமான ஓர்முன்னோடி வேலையின்—இன்று சகலதேசங்களுமே அதன்பயன்களை இன்னும்அனுபவிக்கும் ஓர்மகத்தான பணியின்-ஞாபகத்தை இன்றைக்குமே நிலைபெறச்செய்துவரும் உலகசரித்திரத்தில் மறக்கமுடியாத எத்தனைநாமங்கள் இடம்பெற்றில்லை. கிறிமியயுத்தம் நிகழ்ந்தகாலத்திலே ஸ்குற்றாறியிலும், பலாக்லாவிலும் இருந்துவந்த பிரித்தானிய ஆஸ்பத்திரிகளிலே ஓர்தாதியாகத் தான்ஆற்றிவந்த அயராததும், உற்சாகமுமானபணிகளுக்காகப் புளோறென்ஸ் நைற்றிங்கேல் 1910-ம்ஆண்டு தான்மரணமாக மூன்றுவருடங்களுக்குமுன் காலஞ்சென்ற ஏழாம்எற்வாட் அரசரின் கரங்களிலிருந்து "ஆர்டர் அவ் மெறிற்"எனும் மகிமைவரிசையைப் பெற்றுக்கொண்டாள். "நகர்களிலும், கிராமங்களிலும் சுகாதார போதனை", "இந்தியாவில் சீவியமும், மரணமும்" என்பனவாக அவள்எழுதிய பல்வேறுபுத்தகங்கள் சுகாதார திட்டங்களை ஏற்படுத்தவும், பிரசாரஞ்செய்யவும் எடுத்துக்கொண்டபங்கு அற்பமன்று.

இதுவிஷயமாய்ச் சேர் றொனல்ட் றொஸ்அவர்கள்போன்ற ஒருமனிதரைப்பற்றிச் சிந்திக்கவும் நாம்ஊசிக்கின்றோம். நுளம்புகளாலேயே மலேரியாக்கிருமிகள் பரப்பப்படுகின்றன என்பதைப் பிரமிக்கத்தக்க வகையிலே அவர்கண்டுபிடித்து உலகினைத் திகைக்கச்செய்தார். இவர்கண்டுபிடித்தது மிகப்பெரும் விசேஷப்பட்டதாகும். றொஸ்அவர்கள் "தாம்கண்டுபிடித்ததைக்கொண்டு உலகில் மூன்றிலொரு பங்கைச் சனங்கள் குடியேற வகைசெய்தார்" என்று முந்தியபிரித்தானிய அரசர் குறிப்புரை கூறியபோது அதைப்பற்றி அவர் ஓர்கால் முதற்தரமாகப்புகழ்ந்து வர்ணித்திருக்கிறாரெனலாம்.

இன்னுமே வருடந்தோறும் லட்சக்கணக்கானோரைப் பலியெடுத்துவருகின்ற மலேரியாவால்ஏற்படும் அவலமான அழிவுகளை எதிர்த்து உலகில்எங்கெங்குமே ஆர்வத்துடன் கூடிய போராட்டங்கள் தொடக்கப்பெற்று ஏலவே அதிகபலனும் கிடைத்துவிட்டது.

விசேஷமாய், தற்போது இல்லாதொழிந்த சர்வதேசசங்கத்தால் நியமிக்கப்பட்ட மலேரியாநிபுணர்களின் கம்மிற்றியானது இரண்டாவதுயுத்தத்துக்கு முந்தியவருடங்களிலே மலேரியாவைஎதிர்த்துப் போராடுவதில் பிரமிக்கத்தக்கபணி ஆற்றியிருக்கின்றது. மலேரியாவராமற்தடுக்கும் ஓர்நடவடிக்கையாக மலேரியாக்கால முழுவதிலும் தினமும் 6 கிறேய்ன் குயினைனும் ஓர்கால் மலேரியாகாணுமிடத்து ஓர்சித்தியுள்ளமருந்தாக 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைனும் பாவித்துவர வேண்டுமென்று அவர்கள்கூறும் ஆலோசனை மிகவும் மேம்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது வர்த்தமானம்

### யுத்தம்விரும்பினுல் ஆயத்தம்

"சோவியற்ருஷியா ஓர்பூரணயுத்தத்தில் இறங்கவிரும்புமாஞல், அதனை எதிர்த்துநின்று போராடுவதற்கு நாங்கள் தயாராயிருக்கிறேம்" என்று அமெரிக்க பாதுகாப்புமந்திரியாரான திரு. பிருங்பேஸ்பகிரங்கமாகக்கூறியிருக்கின்ருர். ஆர்க்கான்சாஸ் சர்வகலாசாலையில் அவர்இவ்வாறு பேசியபோது, மேலும் தெரிவித்ததாவது: "நாம் யுத்தத்திற்கு ஆயத்தமாயிருப்பதால் யுத்தஞ்செய்வதன் விபர்த்தத்தை ருஷியதலைவர்கள் உணர்ந்துகொள்வார்கள். கோறியாவில்நாம் துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொண்டதாலும், சுதந்திர உலகிலுள்ள ஏனையநாடுகள் துரிதமாக ஆயுதங்களை உற்பத்திசெய்து தங்களைப் பலப்படுத்திவருவதாலும் சோவியற்அரசின் ஆதிக்கவிஸ்தரிப்பு நடவடிக்கைகள் தடுக்கப்பட்டுவிட்டன. இந்தநிலைமையானது சோவியற் தலைவர்களைச் சிந்தனையில்ஆழ்த்தி அவர்கள் தங்கள் ஆதிக்கவிஸ்தரிப்பு நடவடிக்கைகளைக் கைவிடச்செய்யுமென நம்புகிறேன்."

### பார்வோனின் ஆலயம்

கி.மு. 1324-ம்ஆண்டுமுதல் 1258-ம் ஆண்டுவரையில் இரண்டாவது ரும்செஸ்எனும் பார்வோன்அரசன் எகிப்திலே தேசாந்திரிகளாயிருந்த எபிரேயரின் துணையைக்கொண்டு கி.மு. 1250 வருடங்களுக்குமுன்னர் கட்டியஆலயமானது செழுமைவாய்ந்த நைல்நதியின் முகத்துவாரப்பகுதியிலே புராதன எகிப்திய ஹோரஸ்எனும் தெய்வத்தின்நகரமாகிய டமானூருக்குச்சமீபமாய்இருக்கக் கண்டறியப்பட்டிருக்கிறது. எகிப்திய பூர்வீகஞாபகசின்னபரிபாலனத்தைச்சேர்ந்தபுதைபொருள் ஆராய்ச்சிப் பரிசோதகரான ஷாபிக்பறீட்என்பவரே இதனைக் கண்டுபிடித்தவர். இந்தஆராய்ச்சியின்போது ஆபரணங்களும், மற்றும்விலையேறப்பெற்ற பொருட்களும்அடங்கிய விஸ்தாரமான மயானஇடமொன்றும்வெளிவரலாயிற்று.

### 2-வது ரும்செஸ்மன்னன்

எகிப்திய அரசர்களிலெல்லாம் மிகவதிகமாகப் புகழ்ந்துபாராட்டப்பெற்றவன் இரண்டாவது ரும்செஸ்மன்னனே. இவன் 19-வது இராசவம்சத்தைச்சேர்ந்தவன். பழையஏற்பாட்டின் இரண்டாவது புத்தகமாகிய பிரயாணகாண்டத்தில் எடுத்துக்கூறப்படுகின்ற பார்வோன்அரசன் இவனேயென்று பூர்வகால ஞாபகசின்னங்களின் ஆராய்ச்சியாளர்கள் கருத்துக்கொள்ளுகின்றனர். இஸ்ருயேலரின் பிள்ளைகள் வெகுவாகப்பலுகிப் பெருகித்தொகையிலே எகிப்தியர்களை மேற்கொண்டுவிடுவார்களோவென அஞ்சியவனாய் இவன் அவர்களைப்பெரிதும் இம்சித்துக் கடைசியாக எகிப்திலிருந்து அவர்களைத்துரத்திவிட்டவனும், புராதன எகிப்திலே இன்றுமுள்ள அரைவாசிக்கோவில்களைக் கட்டியெழுப்பியவனும், அவற்றிலே இசிறவேலர்களைப் பலவந்தமாக வேலைக்கு அமர்த்திப் பெருங்கிஷ்டூரங்கள்செய்தவனும் இவனேயாம்.

### நீடிய ஆயுள் வேண்டுமா?

நீண்டகாலம்வாழ்வது இயலாத காரியமெனப் பலர்கருதுகின்றனர். ஆனல், பிரான்ஸ்தேசத்திலே இர்மா சாப்லன்என்ற ஓர்வயோதிகபாட்டி வசிக்கின்ருள். இவள் 1842-ம்ஆண்டு பிறந்தவள். அதனுல் இப்போதுவயசு 109. சில அவசியபிரமாணங்களைத் தவருது நாளாந்தவாழ்க்கையிலே கைக்கொண்டுவரின் எவருமே நீடிய ஆயுள்பெற்றுவாழ இயலுமென்பது இவள்கருத்து. நித்திரைக்குச்செல்லுமுன் இரைப்பை வெறுமையாக இருக்கவேண்டுமாம். அப்போதுதான் ஆறுதலாக நித்திரைகொள்ள இயலுமாம். இரவில் அதிக உணவு அருந்துவதும் தவிர்க்கப்படவேண்டும். தண்ணீர்உணவு முற்ருக நீக்கப்படவேண்டும். பஞ்சுமெத்தை, இறகுமெத்தை என்பன சயனத்துக்கு ஏற்றவையன்று. வைரமான பலகையில் நித்திரைசெய்வதே உத்தமமாம். காலையிலே விடியுமுன் நித்திரைவிட்டுஎழவேண்டுமாம். இரவிலே நேரஞ்சென்று நித்திரைக்குப்போவது நித்திரைக்குப் பங்கத்தைஉண்டாக்கும். இவைகள்எல்லாவற்றிலும்பார்க்க இருதயம் பரிசுத்தமுடையதாயிருத்தல் மிகவும் பிரதானம். பொய், கபடம், பொறாமை, [illegible] முதலிய தீய குணங்கள் ஆயுளைக்குறைக்கின்றன.

## நாளு சங்கதிகள்

—சீனதேச சுவாற்ருேநகரிலே, செல்வவந்தரான சிங்கப்பூர்ச் சீனர்களின் குடும்பங்கள் சீனக்கம்யூனிஸ்தரின் கொடியவேதனைகளுக்கும், கொலைப்பயமுறுத்தலுக்கும் அஞ்சிக் கூட்டங்கூட்டமாகத் தற்கொலைசெய்துகொள்வதாகச் சிங்கப்பூரிலே செய்தி கிடைத்திருக்கிறது. அங்கு ஒருகுடும்பத்தில் மாத்திரம் வளர்ந்தவர்களும், பிள்ளைகளுமாக 27 பேர் கூட்டமாக விஷம்அருந்தி ஒருங்கே உயிரைமாய்த்துக்கொண்டனராம்.

—பொதுசன பாதுகாப்புத்திட்ட வேலையிலே தீவிரமாக ஈடுபட்டுவருகின்ற சுவீடன்நாட்டு அரசாங்கமானது, சென்றயுத்தத்துக்குப்பின் மற்றெந்தநாட்டைக் காட்டிலும் அதிகமான ஆகாயவிமானதாக்குதல் பாதுகாப்பு ஒதுக்கிடங்களை அமைத்திருப்பதாக அதன் உள்நாட்டு மந்திரியாரான திரு. ஈ. ஜே. மொஸ்பேர்க் பெருமைபாராட்டுகின்ருர். பொதுசன பாதுகாப்பு விஷயமாய் அங்கு 8,65,000 சனங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியிருக்கிறது.

—1976-ம்ஆண்டிலே அதாவது இன்னும் 25 வருடங்களிலே பிரயாண ஆகாயவிமானங்கள் மணித்தியாலம் ஆயிரம்மைல் வேகத்தில் பறந்துசெல்லுமென்று ஆஸ்திரேலிய ஐக்கியபிரயாணசேவையின் தலைவரான திரு. டபிள்யு. ஏ. பற்றேர்சன் கூறுகின்ருர். அப்போது ஆஸ்திரேலியாவிலிருந்து அதிகாலையிலே விமானத்தில் ஐரோப்பாவுக்குப் பிரயாணஞ் செய்கிறவர்கள் சூரியகதியிற்சென்று அங்கேயும் அதிகாலையில் சனங்கள் துயிலெழும்போது போய்ச் சேருவார்களாம்.

—சான்பிரான்சிஸ்கோ நகரிலிருந்து சென்ற 1-ந்திகதி சிக்காகோ நகரை நோக்கிப் பறந்துகொண்டிருந்த அமெரிக்க பிரயாணவிமானம் ஒன்று டென்வர் நகருக்குச் சமீபமாக ருெக்கிமலைச் சிகரம்ஒன்றில் மோதுண்டு விபத்துக்குள்ளாகவே அதில்சென்ற பிரயாணிகள் ஐம்பதுபேரும் ஒருவர் தப்பாது சிவமோசமடைந்தார்கள். பதினெரு மணித்தியாலம் தேடியலைந்தபின்னரே அது கண்டறியப்படலாயிற்று.

—"தற்போது நமக்குப் பத்திரிகைச் செய்திகள்மூலம் கிடைக்கக்கூடிய செய்தியிலிருந்து ருஷியாவிடம் சுமார் நூறு அணுக்குண்டுகள் இருப்பதாகத் தெரியவருகிறது" என்று அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபையிலே ஜனநாயக கட்சியைச்சேர்ந்த அங்கத்தவரான திரு. கிளறென்ஸ் கனன் அவர்கள் அச்சபையிலே சமீபத்தில் பேசியபோது தெரிவித்திருக்கின்ருர்.

—யுத்தம் ஒன்று திரும்பவும் மூண்டு கொள்ளுமிடத்து, தனதுநாட்டிலுள்ள கைத்தொழிற்சாலைகளை ஆகாயவிமானத்தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் நோக்கமாகச் சுவீடன் தேச அரசாங்கம் தகுந்தபாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. அவைகளைப் பாதுகாப்பதற்கென்று மாத்திரம் மூன்று லட்சம்பேர் விசேஷவிதமாகப் பயிற்றப்பட்டு வருகின்ருர்கள்.

## கோறிய யுத்தநிறுத்த மகாநாடு

நிகழும் ஆடிமாதம் 8-ந்திகதி ஞாயிறுவாரம் உலகசரித்திரத்தில் இடம்பெறக்கூடிய ஓர் தினமாகும். ஓராண்டுகாலமாக லட்சக்கணக்கான மக்களைப் பலிகொண்ட கோறியயுத்தத்தை நிறுத்துவதுபற்றிக் கேஸோங் நகரில் சீன-வடகோறிய கம்யூனிஸ்த பிரதம தளபதிகளின் பிரதிநிதிகளும், ஐ. நா. பிரதம தளபதியின் பிரதிநிதிகளும் மகாநாடுகூடி அன்றுமுதல் சமாசப்பேச்சு நடத்துகிருர்கள். கோறியயுத்தத்தின் ஓராண்டு பூர்த்தியாகும் தினத்துக்கு இருதினங்களுக்குமுன் ஐ. நா. சபையிலுள்ள ருஷிய பிரதிநிதி திரு. மாலிக் அந்தயுத்தத்தில் சமாசம்ஏற்பட வேண்டுமென்று திடீரெனவிடுத்த கோரிக்கை உலகைத்திகைக்கச் செய்தது.

அவர் இக்கோரிக்கையை வெளியிட்டதிலிருந்து கோறியயுத்த சமாச முயற்சிபற்றி நிகழ்ந்த சம்பவங்களின் விளைவாகக் கேஸோங் நகரில் யுத்தநிறுத்தப்பேச்சுநடைபெறத்தொடங்கியிருக்கிறது. லட்சக்கணக்கானமக்களை இந்த யுத்தபூதம் விழுங்கியபின் இப்பொழுதாவது அதை ஒழித்துக்கட்டும் முயற்சி ஆரம்பமாயிருப்பதுகண்டு உலகம் மகிழ்ச்சியுறும் என்பதற்கையமில்லை. உலகுக்குப் பெருநாசம் விளைக்கக்கூடிய மூன்ருவது மகாயுத்தம் ஆரம்பமாவதற்கு அடிகோலுவதாகவிருந்த கோறியயுத்தம் நிறுத்தப்படுவதால் உலகை எதிர்நோக்கியுள்ள ஓர் பெரியஆபத்துத் தவிர்க்கப்படும். என்ருலும், இந்தக் கோரியயுத்தத்தில் சமாசம் ஏற்படுவதன்மூலம் உலகை எதிர்நோக்கியுள்ள அபாயம் முற்றிலும் நீங்கிவிடுமென்று கருதுவதற்கில்லை. கோறியயுத்தம் சமாச முடிவுற்றதும், சர்வதேசங்களையும் எதிர்நோக்கியிருக்கும் அபாயம் நீங்கிவிடும்என்று எவரும் கருதிவிடலாகாதென்றும், ஆதலால் ஆயுதமுஸ்திப்பு ஏற்பாடுகள்தொடர்ந்து நடைபெற அமெரிக்க மக்கள் சகல உதவிகளையும்புரிய முன்வரவேண்டுமென்றும் அமெரிக்க ஜனதிபதி ட்றாமன் அமெரிக்க சுதந்திரத்தினக்கொண்டாட்டத்தில் பேசியபோது எச்சரித்துள்ளார்.

அதேதினத்தில் பீக்கிங் றேடியோவும் கோறியயுத்தத்தில் சமாசம் ஏற்படுவதால் கம்யூனிஸ்த சீனவை எதிர்நோக்கியிருக்கும் அபாயம் நீங்கிவிடும் என்று கருதலாகாதென்றும், "ஏகாதிபத்தியவாதிகள்" போர்மோசாவை ஆக்கிரமித்துக்கொண்டும், தென்கோறியாவையும், யப்பானையும் தங்கள் செல்வாக்கிற்குட்பட்ட நாடுகளாக வைத்துக்கொண்டிருக்கிருர்கள் என்றும், ஆதலால் கம்யூனிஸ்த சீன யுத்தசன்னதமாயிருக்கச் செய்யப்படும் ஆயுதமுஸ்திப்பு முயற்சிகளுக்குச் சீன மக்கள் உதவிபுரியவேண்டுமென்றும் எச்சரிக்கைவிடுத்துள்ளது.

கோறியயுத்தத்தில் ஐ. நா. சபை நேரில்ஈடுபட்டதால் பயன்கிடைக்காமற் போகவில்லை. கம்யூனிஸ்தர்கள் ஆக்கிரமிப்பு மனப்பான்மையுடன் தங்கள் வால்களை இனிமேல்நீட்ட முடியாதென்பதையும், அவ்வாறு நீட்டினுல் அவ்வால்கள் நறுக்கப்பட்டுவிடுமென்பதையும் கோறியயுத்தத்தால் இப்பொழுது கம்யூனிஸ்தர்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள் என்பதற்கையமில்லை. கம்யூனிஸ்தர்கள் பழிக்குப்பழிவாங்கப் படவில்லையென்றபோதிலும் இவ்விதஉணர்ச்சியைக் கோறியயுத்தமானது கம்யூனிஸ்தர்களுக்கு ஊட்டியிருப்பதுவே ஐ. நா. சபைக்கு ஓர் பெரும்வெற்றியாகும். கோறியயுத்தத்தை நீடித்துநடத்தி இன்னும் லட்சக்கணக்கானமக்கள் பலியாவதைவிடக் கம்யூனிஸ்தர்களுக்கு இவ்விதபடம் கற்பிக்கப்பட்டதோடு யுத்தத்தைநிறுத்துவது சாலச்சிறந்த செயலாகும்.

பலாலி
அரசினர் ஆசிரியகலாசாலை

### கல்வித்தின விழா

புதிய கல்வித்திட்டங்களை எப்படி நடைமுறையிற் கையாளலாம்? என்னும் வினவின் விடையை அனுபவத்திற் காட்டவல்ல காட்சிகள்.

**ஆசிரியர்க்கோர் அருந்தருணம்**
**பார்க்கத் தவருதீர்!**
**இவ்வருடம் மூன்றுதினங்கள்**
**அடுத்து நடைபெறும்.**
**பாலரைவளர்க்கும் பொருட்காட்சி.**
**கண்களைக்கவரும் கதம்பக்கச்சேரி.**
**புதிய கல்வி சம்பந்தமான**
**சொற்பொழிவு.**

ஆதியவற்றை

நிகழும் ஆடிமாதம் 12-ம் 13-ம் 14-ம் திகதிகளில் மேற்படி கலாசாலைப் பழையமாணவர் சங்க ஆதரவில் நடைபெறும் காட்சிகளை எதிர்பாருங்கள்.

இஸ்பிரீ. ஆக. பின்வரும்

### 9-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
(லூக். 19: 41—47)

அக்காலத்தில் யேசுநாதர் எருசலேம் சமீபத்தில்வரவே, நகரத்தைப்பார்த்து அதன்பேரில் கண்ணீர்விட்டுத் திருவுளம்பற்றினதாவது: உனக்குக் கிடைத்த இந்நாளிலாவது உன் சமாதானத்திற்கு உரியவைகளை நீ அறிந்திருப்பாயாகில் நலமாயிருக்குமே; ஆனல், இப்போது அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கின்றன. ஆகையினல் உனக்கு நாட்கள்வரும். அப்போது உன்சத்துருக்கள் அகழினல் உன்னை வளைத்து, உன்னைச்சுற்றிக்கொண்டு,நாலாபக்கத்திலும் உன்னை நெருக்குவார்கள். உன்னையும் உன்னிடத்துள்ள உன் மக்களையும் தரையில்தள்ளி, உன்னிடத்தில் கல்லின்மேற்கல்லையும் இருக்கவிடார்கள். ஏனெனில், (ஆண்டவர்) உன்னைச சந்தித்தகாலத்தை நீ அறிந்து கொள்ளவில்லை என்ருர். பின்பு, அவர் தேவாலயத்திற் பிரவேசித்து அதிலே விற்கிறவர்களையும் வாங்குகிறவர்களையும் வெளியில் துரத்தத் தொடங்கி: என்வீடு செபத்தின் வீடென்று எழுதியிருக்கிறதே; நீங்களோ அதைக்கள்ளருடைய குகையாகச் செய்தீர்கள் என்ருர். அவர் அநுதினமும் தேவாலயத்தில் உபதேசித்துக்கொண்டிருந்தார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக!

—ருஷிய அடிமைத்தொழில் முகாங்களிலே வருடந்தோறும் 30 லட்சம் கைதிகள்வரையில் இறந்துகொண்டு வருவதாக முன்னர் ஜேர்மன் காவல் முகாங்களிலே இருந்தவர்களைக் கொண்ட நீதிஸ்தலம் ஒன்று விசாரணையிலே கண்டறிந்திருக்கிறது. இவ்விசாரணையின்போது முன்னர் ருஷியஅதிகாரிகளாயிருந்த ஒருதொகையானேரும் சாட்சியம் அளித்திருக்கின்ருர்கள். இவ்விசாரணை பிறசெல்ஸ் நகரில் நடைபெறலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோக்ஷபாதை

(கூடின செபங்களுடன்)

விற்பனைக்குத் தயாராகிவிட்டது.

விலை பிரதி ஒன்று

கலிக்கோக்கட்டு ... 5-50

தோல்கட்டு ... 7-50

தபாற்செலவு சதம் 35.


## திருநாள் அட்டவணை

ஆடிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 13 | அர்ச். அனக்கிலேத்தப்பர் | (சி) |
| சனி | 14 | அர்ச். பொனவெந்தூர் | (வெ) |
| ஞா | 15 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 9-ம் ஞாயிறு — திரு இரட்சகரின்திருநாள்— அர்ச். என்றீக்கப்பர் | (வெ) |
| திங் | 16 | உத்தரியமாதா திருநாள் | (வெ) |
| செ | 17 | அர்ச். அலெக்சியார் | (வெ) |
| புத | 18 | அர்ச். கமிலப்பர் | (வெ) |
| வியா | 19 | அர்ச். வின்சேந்தியு த பாவிலு | (வெ) |


சத்தியவேத

# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு

ஆடிமாதம் 12-ந் திகதி


## சமாதானம் ஏற்படுமா?

கோறியயுத்தம் ஆரம்பமாகிச் சென்றஆனிமாதம் 25-ந்திகதியுடன் ஆண்டொன்று பூர்த்தியாகிவிட்டது. இந்தயுத்தத்துக்குக் காரணபூதமாயுள்ளது சோவியற்ருஷியா வென்பதும், அதிலேஅமெரிக்கஐக்கியதேசத்தை முதன்மையாகக்கொண்டு ஐக்கியநாடுகள் சுதந்திரதென் கோறியாவுக்குத் துணைச்செய்ய முன்வந்திராவிடின் இன்று தென்கிழக்குஆசியாவின் நிலைமை யாதாகுமென்பதும்யூகித்து அறியத்தக்கனவாகும். கோறியயுத்தம் ஆரம்பமாகி ஓராண்டு முடிகிறசமயம் பார்த்திருந்து ஐ. நா. சபையிலே ருஷியப்பிரதிநிதியாய் இருந்துவருகின்ற ஜேக்கப் மாலிகஎன்பார் அங்கு போரைநிறுத்திச் சமாதானம் பேசப்படவேண்டுமென்று விடுத்தகோரிக்கையானது, பிள்ளையுங்கிள்ளித் தொட்டிலையும் ஆட்டிவிடும் சம்பவம்போலாகிச் சகலருக்குமே மிகுந்த பிரமிப்பை உண்டுபண்ணுவதாயிற்று. "ஆற்றிலேபோனாலும் செட்டி ஆதாயமில்லாமல் போகான்"என்ற முதுமொழிக்கிசைய, கோறியயுத்த நிறுத்தத்திலும் சோவியற் அரசு யாதோதந்திரத்தைக் கையாடுகிறதென்றே உத்தேசிக்கவிடமாயிற்று. கோறியாவிலேஉண்மையான சமாதானம்ஏற்படுமா? சோவியற்அரசு அத்தகைய சமாதானத்தை உள்ளபடியே ஆசிக்கின்றதா? கம்யூனிஸ்த வடகோறியாவுக்கும், சனநாயக தென்கோறியாவுக்கு மிடையே ஏற்பட்டுள்ள உண்மையான பிணக்கின்விளைவே இந்தயுத்தமாயிருந்தால் சமரசம்பேசலாம். அப்போது கோறியாவிலே உண்மையான சமாதானம் உண்டாகலாம். ஆனல், வடகோறியாவினதும், சீனவினதும் பொம்மைஅரசாங்கங்களின் எசமானர்களான சோவியற்தலைவர்கள் உள்ளபடியே சமாதானத்தை ஆசிக்கிருர்களா? ஆசிப்பார்களாயின் கோறியாவில் உண்மையான சமாதானம் உண்டாகும். ஆனல் தென்கிழக்குஆசியா முழுவதிலும் புரட்சியைஉண்டுபண்ணுவதையே உள்நோக்கமாகக் கொண்டு அயராமுயற்சியுடன் பலஆண்டுகளாக அவர்கள் செய்துவந்த ஆயத்தங்களின் பலனையெல்லாம் அவர்களுக்கு வெற்றியைத்தராத சமாதானம் முற்ருகப் பாழாக்கிவிடுமன்ருே? ஆகவே, கோறியாவில் சமாதானம் ஏற்படுமென்பதுசந்தேகம். சோவியற்தலைவர்களின் கட்சி தூண்டிவிட்டுநடைபெறும் இந்த யுத்தத்திலேஅதுதான் வெற்றிகொள்ளுமா? அன்றேல் அமெரிக்காமுதலாம் சனநாயகநாடுகளின் கட்சிதான் வெற்றிகொள்ளுமா? என்று கவனித்து வெற்றிகொள்ளுங் கட்சியோடு சேர்ந்துகொள்ளும் மனப்பான்மையுடன் ஆசியநாடுகள் மதில்மேற்பூனைகள்போன்று இருந்துவருவதை ருஷியா நன்கறியுமன்ருே! ஆகவே, கோறியாச் சமரசமுயற்சி ஐக்கியநாடுகளின் கட்சிக்கு வெற்றியாகமுடியுமிடத்து அந்தநாடுகளெல்லாம் அக்கட்சியின்பக்கமாகச் சேர்ந்துகொள்ளுமாகவே, கோறியாவில்சமாதானம் ஏற்படுமென்பது சந்தேகம். யுத்தத்தினுல் எல்லாவற்றையும் ஆதாயப்படுத்திக்கொள்ளலாம்; சமாதானத்தினுல் எல்லாவற்றையும்இழந்துபோக வேண்டிவரும் என்பது ருஷியாவின் குறிக்கோளாகும். ஆகவே, கோறியாவில் சமாதானம்ஏற்படுமென்பது சந்தேகம். கோறியயுத்தம் பின்னருந் தொடர்ந்து நடைபெறும்போது அமெரிக்க ஆட்பலமும், யுத்ததளபாடமும், பணமும் கோறியாவிலே பின்னருந்தொடர்ந்து செலவாகிக்கொண்டிருக்க, ருஷியாவோ தனது படைவகுப்புகளில் ஒன்றையேனும் அனுப்பிவையாது இதற்குமுன்போலவே இனிமேலும் யுத்தம்நடந்துகொண்டிருக்கவகை பார்க்கும். ஆகவே, கோறியாவில் சமாதானம்என்பதுசந்தேகம். கோறியயுத்தநிறுத்தத்தாலே அமெரிக்கஐக்கியதேசமும், மற்றும் சுதந்திரநாடுகளும் தங்கள்ஆயுதசுவீகரணத் திட்டங்களைக் கீழேபோட்டுவிட்டு வாளாவிருந்துவிடுமென்று ருஷியாநினைக்கப் போவதில்லை. ஆகவே, கோறியாவில் சமாதானமென்பது சந்தேகம். ஆனல், கோறியயுத்தம் தொடர்ந்து நடக்குமிடத்து, கம்யூனிஸ்தவடகோறியா தோல்வியடையுமென்பது நிச்சயம். இத்தனைமாதங்களாக இந்தப்பெரிய கம்யூனிஸ்தசீன அதற்குத்துணைச் செய்தும் கண்டபலன் யாது? தனதுபலவீனத்தையே துலாம்பரமாகச் சீன காட்டிக்கொண்டது. மேலும் தேசிய சீனப்படைகள் போர்மோசாவிலே அமெரிக்காவின் துணையைப்பெற்றுத் தீவிரமாகப்பலமடைந்துகொண்டிருப்பதும், அவைகள் தென் சீனவில் எந்தவேளை இறங்குமோவென்று திகில்கொண்டிருப்பதும், சீனமக்கள் இரண்டுபட்டுக்கொண்டிருப்பதும், ருஷியா படைத்துணைஅளித்துத் தன்னை ஆதரிக்குமோவென்றசந்தேகம் கொண்டிருப்பதும் ஆதியவெல்லாம் இந்த இழுபறியுத்தத்தில் தான் இறங்கியது மதியீனமேயென்று கம்யூனிஸ்தசீனவை எண்ணச்செய்திருக்குமாயின் ஒருவேளை சமாதானம் ஏற்படலாம். அத்துடன் கம்யூனிஸ்த வடகோறியாவும் ருஷியா தூண்டித் தான் யுத்தத்தில் இறங்கப்போய்—தென்கோறியாவைக் கண்மூடி விழிக்காமுன்னரே ஒர்கை பார்த்துவிடலாமென்று துணிந்து இறங்கப்போய்— சணப்பன் வீட்டுக்கோழிபோன்று சங்கடப்படுகிறேனேயென்று சிந்தித்திருக்குமாயின் சமாதானம்ஏற்படலாம். ஆனல், ருஷியா யாது நினைத்திருக்கிறதோ?

## குருத்துவ தங்க யூபிலிவிழா

நமது மேற்றிராசனத்திலே காலங்கண்ட இருகுரவர்திலகங்களாய்விளங்கும் வண. லூயிஸ் கிற்ரோ சுவாமிகளும், வண. செலெஸ்ரீன் மார்ஜெறி சுவாமிகளும் சென்ற 7-ந்திகதி சனிக்கிழமையன்று தங்கள் குருத்துவ செம்பொன்யூபிலியை மேற்றிராசனமாளிகையிலேமிக அமைதியாகவும், பயபக்தியாகவும் கொண்டாடினுர்கள். அன்றுகாலை வழமைபோலநீலக்கடலிலிருந்து மேலெழுந்த சூரியனின் செம்பொற்கதிர்கள் எங்கும் பிரபை வீசிக்கொண்டிருக்க, ஆசனக் கோவில்மணிகள் ஆனந்தயாக நாதகீதஞ்செய்து யாவரையும் அன்பாய்க் கூவியழைப்பன போல் ஆகாயவீதியிலே இன்ப ஓசை பரப்பிக்கொண்டிருக்க, நாலா வீதிகளாலும் சரிந்து கொண்டிருந்த பக்தர் குழாங்களாலே ஆலயமுழுவதும் தேங்கிக்கொண்டிருக்க, 6-30 மணியளவில் யூபிலிநாயகர்கள் இருவரும் இருமேற்றிராணிமார் சமேதராய், சகோதரகுருப்பிரசாதிகள்புடைசூழ ஆலயத்தை நோக்கி அமைதியாகவும், மனவருட்சிக்குரியவிதமாகவும் அடிமேல்அடிவைத்துநடந்துசென்ற மனோகரகாட்சியானது கண்டோர் உள்ளங்களிலெல்லாம் ஆனந்தவெள்ளம் புரண்டோடச் செய்வதாயிற்று. அங்ஙனம் யூபிலிநாயகர்கள் இருவரும் அழகிய இயற்கைமலர்களாலும், செயற்கை மலர்களாலும் அலங்கரிக்கப்பெற்று, மின்சாரதீபங்கள் ஒளிசெய்துநின்ற ஆலயபலிபீடஸ்தானத்தை அணமியதும் வாத்தியம் இசைக்க, பாடகர் குழாம் இனியகீதமபாடியது. எங்கும் இன்பகரமானதோற்றம் அளித்தது. மேற்றிராணிமாரும், குருமாரும் தத்தம் ஆசனங்களில் அமர்ந்ததும் வண. கிற்ரோசுவாமிகள் ஆசாரியவஸ்திரங்கள் அணிந்து யூபிலித் தோத்திரபூசை நிறைவேற்றினர். அதிலே பெருந்திரளானோர் திவ்வியநன்மைபெற்று யூபிலிநாயகர்களுக்காக மன்ருடிக்கொண்டனர். பூசைமுடிந்ததும்வண.மார்ஜெறிசுவாமிகள் "தெதேயும்" பாடித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளலாயினர். அதன்மேல் குரவர்கள் இருவரும் மேற்றிராசனமாளிகைசேரவே, அங்கு மேற்றிராணிமாரும், குருமாரும் அவர்களுக்கு யூபிலிச்சோபனங் கூறிநின்ருர்கள். அவர்களைத் தொடர்ந்து பரிமேலர் எஸ். அருளானந்தம் அவர்களை முதன்மையாகக்கொண்டுஏனையோரும் அவர்களைச்சந்தித்து யூபிலிச் சோபனங்கூறி அவர்களின் திருக்கர ஆசிபெற்று நின்ருர்கள். ஏலவே தமது குருத்துவ தங்கயூபிலியைக் கொண்டாடியுள்ளவரான வண. என். சந்தியாகு சுவாமிகளும் இவ்விழாவில் கலந்துகொண்டமை மிககவர்ச்சிகரமாயிருந்தது. யூபிலிநாயகர்கள் வாழ்க! இன்னும் பல்லாண்டு எம்மிடையே சிறந்து வாழ்க! எம்பெருமான் தமது திருவருட்பிரசாதங்களை இவர்கள்மேல் இனிமேலும் இனிதே பொழிந்தருள்வாராக!

## சுதேச வர்த்தமானம்

### ஓர்புதிய குருவானவர்

அர்ச். இராயப்பர், சின்னப்பர் திருநாளாகிய சென்ற ஆனிமாதம் 29-ந்திகதியன்று தூத்துக்குடி மேற்றிராசனக்கோவிலிலே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான வண. ஜெறேமியாஸ் அராசரத்தினம் பிறதர் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றனர். தூத்துக்குடி உதவிமேற்றிராணியாரான மகாவந். தோமஸ் பர்ணுந்து ஆண்டவரே குருத்துவாபிஷேகஞ் செய்துவைத்தவர். ஆண்டவர்அவர்கள் குருப்பட்டம் அருளியது இதுவே முதன்முறையாகும். அபிஷேக திருச்சடங்குக்குப் புதியகுரவரின் தாயாரும், சகோதரனும், சகோதரியும், மாமியாரும் சென்றிருந்தார்கள். அர்ச். சின்னப்பர் திருநாளாகிய மறுநாள் அவர் மேற்றிராசனக் கோவிலிலேயே தமது முதற்பூசையை நிறைவேற்றினர். குருப்பட்டம்பெற்ற அன்று தினம் குருமார் ஏழுபாஷைகளில் அவருக்குச் சோபனங்கூறிநின்ருர்கள்.

### குருத்துவவெள்ளியூபிலி

மிருசுவிற் கட்டளைக்குரவரும், சமீபத்திலே தமதுகுருத்துவ வெள்ளியூபிலியைக் கொண்டாடியவருமான வண. எஸ். ஜே. வேதநாயகம் சுவாமியவர்கள் அச்சுவேலியைத் தமது ஜனனபதியாகக்கொண்டவர். அதனுல் அப்பதியில்விளங்கும் அர்ச். சூசையப்பர்கோவில் விசாரணைப்பங்குக் கட்டளைக்குரவரும், கத்தோலிக்கமக்களும் ஒன்றுசேர்ந்து சுவாமிகளின் யூபிலிவிழாவை இம்மாசம் 15-ந்திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமைகொண்டாட முன்வந்து ஆங்காங்கு குருமாருக்கும் ஏனையோர் பலருக்கும் அழைப்புப்பத்திரம் அனுப்பியிருக்கின்ருர்கள். அன்றுகாலை 7-30 மணிக்கு சுவாமி அவர்கள் பாடற்பூசை நிறைவேற்றித் "தெதேயும்"பாடித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளுவார். பின்னர் 10 மணிக்கு வாத்திய வரிசையுடன் அவர் கலாசாலைமண்டபத்துக்கு அழைத்துச்செல்லப்பெற்று, அங்கே யூபிலிச்சோபனபத்திரம் படித்துக் கொடுத்து வரவேற்புவிழா நடந்தேறும்.

### ஆசிரியருக்கு மகிமைவிருது

கொழும்பு, சஞ்சூசையப்பர்கல்லூரியில் ஓர்ஆசிரியராயிருந்து தற்போது 25 வருடகாலம் தொண்டாற்றி முடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னமடுத் திருநாள்

சரவணை, சின்னமடுப்பதியிலே பரிசுத்த செபமாலைமாதாவின் திருநாளும், அதற்கு முந்திய திருவிழாக்களும் வழமைபோல் இவ்வருடமும் ஆடம்பரமாய்க் கொண்டாடப்படும். திருவிழாக்கள் ஆடி மாதம் 26-ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆவணிமாசம் 5-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை திருநாள்முடிவாகும்.

திருப்பதியிலே மகாவந். மேற்றிராணி ஆண்டவரும், பலகுருமாரும் சமூகமாயிருப்பார்கள்.

யாத்திரிகளுக்கு வேண்டிய வசதிகளெல்லாம் செய்யப்படும்.

கட்டளைக்குரவர்.

திருப்பவரும், "சமாஜசமாய" எனும் சஞ்சிகையின் ஆசிரியராயிருந்து பலராலும் நன்கறியப்பெற்றவரும், கத்தோலிக்க கைங்கிரியங்களிலே சிறப்பாக ஈடுபட்டுவருகிறவருமான திரு. அந்தோனி ஜயமன்னே அவர்கள் திருச்சபைக்குச்செய்துள்ள சீரியசேவைகளைப்பாராட்டிப் பரிசுத்தபாப்பரசர் அவருக்கு "பெனெமெறென்றி" எனும் மகிமைவிருது சந்மானித்திருக்கின்றார்.

### கல்விமந்திரியார்

கல்விமந்திரியாரான திரு. ஈ. ஏ. நுகவெல அவர்கள் தமது பாரியாருடன் லண்டனிலிருந்து சென்றசனிக்கிழமை கொழும்புவந்து சேரலாயினர். லண்டனிலுள்ள இலங்கை மாணவர்களைக் கம்யூனிஸ்தர்களென்று அபவாதங்கூறி அவமதிப்பது, அல்லது அவர்களை இடதுசாரிகளென்றுதானும் குற்றஞ்சாட்டுவது முற்றும்வியர்த்தமாகுமென அவர் தெரிவிக்கின்றார். "நான் எமது மாணவர்களைத் தனிப்படவும், கூட்டமாகவும்சந்தித்து, அவர்கள் இடதுசாரிகள் அல்லவென்று சந்தேகமறத் தெரிந்துகொண்டேன். எனது சுற்றுப்பிரயாணத்தின்போது அநேகதேசங்களை நான் தரிசித்திருக்கிறேன். ஆனால், உலகில் மிகச்சிறந்தநாடு இலங்கையென்றே நான் கண்டுஉணர்ந்துள்ளேன்" என்றும் மந்திரியார் தெரிவித்திருக்கின்றார்.

### கார்விபத்து

கம்பகாவிலே ஹில்ஸைட் தோட்டத்தைச் சேர்ந்தவரான திரு. டி. எல். பனல்லா என்பவருக்குச் சொந்தமான கார்ஒன்று சென்றசனிக்கிழமை வெள்ளாவைக்கும், கொடஓயாவுக்குமிடையே 38 மைல் கட்டையில் பாதையை விட்டு விலகிச்சென்று ஓர் மரத்தில் மோதியமையால் 6 பேர்காயமடைந்தனர். இவர்களை வெள்ளாவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லும்போதுவழியிலே திரு. பனல்லா இறந்துபோயினர்.

### கடன்கேட்ட குற்றம்

கொழும்புக்குச் சமீபமாய் பையகாமா எனும்கிராமத்திலே சென்றவியாழக்கிழமை எம். ஏ. சுவாறிஸ் அப்புகாமியின்கடைக்கு அவன் மருகனான வி. ஆர்னோலிஸ் என்பவன் சென்றபோது இவன் கொடுக்கவேண்டிய நாலு ரூபா கடனையும்தரும்படி மாமன்கேட்டான். இது விஷயமாய் இருவருக்குமிடையே வாக்குவாதம் உண்டாக, ஆர்னோலிஸ் ஓர் செங்கல்லை எடுத்து மாமனின் தலையில் வீசவே அவன் காயமடைந்து பின்தஆஸ்பத்திரியில் இறந்துபோயினன்.

### புதியபத்துச்சத முத்திரைகள்

இரண்டாவது தொடர்பான சித்திரப்படம்அமைந்த பத்துச்சதம் பெறுமதியான புதியதபால் முத்திரைகள் வருகிறஆவணிமாதம் 1-ந்திகதி முதல் விற்பனைக்கு விடப்படவிருக்கின்றன. தற்போது பாவனையில் இருந்துவருகின்ற பத்துச்சத முத்திரைகளின் விற்பனை அன்றுமுதல் நிறுத்திவிடப்படும். ஆனால், அத்திகதிக்குமுன் அவைகளை வாங்கியிருப்பவர்கள் முடிகிறவரையில் அவற்றைப்பாவிக்கலாம்.

## அர்ச். பிலோமினம்மாள் திருநாள்—நாரந்தனை

இத்திருநாள் நோவனைகள் இம்மாசம் 13-ந் திகதி வெள்ளிக்கிழமை சாயந்தரம் ஆரம்பமாகி, அடுத்த 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை பூசையுடன் முடிவாகும்.

கட்டளைக்குரவர்

## அதிபர் சுபதினம்

கொழும்புத்துறை, அர்ச். சூசையப்பர் தாபனஅதிபர் வண. எல். ஏ. சிங்கராயர் சுவாமியவர்கள் சுபதினம் சென்ற 7-7-51 சனிவாரம் தாபன ஆசிரியமாணவர், மாணவிகளால் ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை 7 மணிக்குச் சுவாமியவர்கள் அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த சிற்றாலயத்தில் பாடற்பூசை நிறைவேற்றினர். அவ்வேளை அநேக பழையமாணவர், மாணவிகளும், பிரமுகர்கள்பலரும் குடும்பசமேதராகச் சமூகமளித்திருந்தார்கள்.

பின்னர் காலை 10மணிக்குச் சுவாமியவர்கள் தாபனமாணவர், மாணவிகளாலும், ஆசிரியர்களாலும் அலங்காரமுற்றுவிளங்கிய கலாசாலைமண்டபத்திற்கு அழைத்துக்கொண்டுபோகப்பட்டு, புஷ்பாரங்கள் சூட்டப்பெற்று, உயராசனத்தெழவே, மாணவர், மாணவிகளால் சோபனகீதங்கள் படிக்கப்பட்டன. ஆசிரியமாணவிகளால் அழகியவேலைப்பாடமைந்த வந்தனோபசாரப்பத்திரம்ஒன்று படித்துக்கொடுக்கப்பட்டது. அதன்மேல் சுவாமிகளுக்கு அன்புத்தெட்சணைகள் வழங்கப்பட்டன. ஆசிரியமாணவர்கள் சிலரும், பழையமாணவர், மாணவிகள் சிலரும் இனிய சொற்பொழிவுகளால் சுவாமிகளுக்குப் புகழ்மாலை சாற்றினின்றார்கள். சங். தாயாரவர்களின் வாழ்த்துரைக்குப்பின் சுவாமியவர்கள் எழுந்து, தமக்குச்செய்யப்பெற்றவைகளுக்காக நன்றித்துதியும், மாணவர் மாணவிகளுக்கு நன்மதியும் கூறித் தமதுதிருக்கர ஆசீரந்தனர். அன்று சமூகமளித்த பழையமாணவர், மாணவிகட்கு உருமத்தின்போது ஆசிரியமாணவர், மாணவிகள் சம்பிரமவிருந்தொன்றும், சாயந்தரம் ஓர் தோட்டோபசாரணையும்நடத்தினார்கள்.

பிற்பகல் 2-30 மணிக்குக் கலாசாலை விளையாட்டுமைதானத்தில் விளையாட்டுப்போட்டிகள் பரிமளிப்பாக நடைபெற்றன. கலாசாலைமாணவர்களும், மாணவிகளும் அவற்றிலே உற்சாகத்துடன் கலந்துகொண்டார்கள். மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பலபாகங்களிலுமிருந்துவந்த பிறஆசிரிய மாணவர், மாணவிகளும் அவற்றில் பங்குபற்றியமை பாராட்டத்தக்கது. கொழும்புத்துறை, ஆசிரியகலாசாலைச் சரித்திரத்திலே அத்துணைசிறப்பான முறையில் இந்தப்போட்டிகள் நடைபெற்றமை இதுவே முதன்முறையாகும். ஈற்றில் அவற்றிலே வெற்றிபெற்றவர்களுக்கு மகாவந். கியோமார் ஆண்டவரால் பரிசில்கள்வழங்கப்பட்டதும், செவாலியர் எஸ். அருளானந்தம் அவர்கள் மாணவர்களுக்கு உற்சாகமூட்டத்தகும் ஓர் சொற்பொழிவாற்றினர். மாலை 8 மணிக்குக் கலாசாலைக்கீதத்துடன் யோசேப்புவின் சரித்திரம் ஆசிரியமாணவர்களால் நாடகமாக விமரிசையுடன் நடித்துக்காட்டப்பட்டுப் 10 மணியளவில் பாப்பாசர்கீதத்துடன் அதிபர் சுபதினம இனிதே நிறைவாயிற்று.

— ஓர் மாணவன்

## ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

அடுத்துவரும் பாடசாலை விடுமுறைகாலத்தில் (10-8-51—3-9-51) தங்களுடைய வீட்டுத்தபால் விலாசம் என்னவெனத் தெரிவித்துக்கொள்ளும்படி கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர்கள் எல்லோரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

T. A. J. MATHURANAYAGAM
Gen. Manager, R. C. Schools
Jaffna, 10-7-51.

## பாடசாலைக்கோணம்

A. 14-6-51-இல் வெளியான வினாவிற்கு. விடையனுப்பியவர்களுள் முதல்இடம்பெற்ற ஐவரினதும் நாமங்கள் பின்வருமாறு: (1) பி. அன்னம்மா, மாவிலங்கேணி. (2) யோ. ஆரோக்கியநாதர், கொழும்புத்துறை. (3) ரி. அலெக்சான்டர், கொழும்புத்துறை. (4) செ. பவுலப்பு, கொழும்புத்துறை. (5) தி. சூசை ரேச், திருஇருதய கல்லூரி, கரவெட்டி.

B. மாணவி பி. அன்னம்மாவின் விடையை ஈண்டு தருகின்றோம்.

வினா:—ஆகையால் உமது பிறசமய மாணவ மாணவிக்கு மோட்சம் இல்லையா?

விடை:— அஞ்ஞானிமுதற்கொண்டு சகலமனிதரும் மோட்சகதிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது சத்தியம். ஆனால், எவனாவது தண்ணீரினாலும், இஸ்பிரீத்துசாந்துவினாலும் மறுபடியும் பிறவாதிருக்கில் மோட்சஇராச்சியத்துள் பிரவேசிக்க மாட்டானென்று தேவன்தாமே திருவுளம்பற்றியிருக்கிறார். ஆகவே, ஞானஸ்நானம் நமது ஆத்தும இரட்சணியத்திற்கு மிகவும்அவசியம்.

(a) ஞானஸ்நானம்: தண்ணீர் ஞானஸ்நானம், இரத்த ஞானஸ்நானம், ஆசைஞானஸ்நான மென மூவகைப்படும். ஒருபிள்ளை பிறந்து புத்திவிபரம் அறியுமுன் தண்ணீர் ஞானஸ்நானம் பெறக்கூடாவிட்டால் இரத்தஞானஸ்நானமாவது மோட்சத்தைஅடைவதற்கு முழுதும் அவசியம். புத்திவிபரம் இல்லாதபிள்ளை சத்தியவேதத்திற்காகக் கொல்லப்படுவது இரத்த ஞானஸ்நானத்திற்குப் போதுமானது. (உ-ம்.) மாசில்லாக் குழந்தைகள். புத்திவிபரம் அறியாத பிள்ளைகள் தண்ணீர் ஞானஸ்நானத்துக்காவது அல்லது இரத்த ஞானஸ்நானத்துக்காவது ஆசைப்படக்கூடாததினால், அவர்கள் ஆசைஞானஸ்நானத்தினால் மோட்சத்தை அடையமுடியாதென்பது தெளிவு.

(b) பிறசமயப்பிள்ளை புத்திவிபரம் அறிந்தபின் விசுவசித்து ஞானஸ்நானம்பெற்றதும் உடனே இறந்தால் நேரே மோட்சம் சேரும். அப்படி ஞானஸ்நானம் பெறக்கூடாவிட்டால் தன்னைஉண்டாக்கிய ஒரேசருவேசுரன் உண்டென்றுவிசுவசித்து, நம்பிச் சிநேகித்து இயன்றமட்டும் வேதத்தின் பிரதானசத்தியங்களை அறிந்து, தான் கட்டிக்கொண்ட பாவங்களுக்காக உத்தமமனஸ்தாபப்படல்வேண்டும். இன்னும் சமயம்கிடைத்தவுடன் ஞானஸ்நானம்பெற்றுச் சருவேசுரனுடையவும், திருச்சபையுடையவும் கற்பனைகளைத் தன் அந்தஸ்துக்குத்தக்கபடி அனுசரிக்க ஆசையாகவும் இருக்கவேண்டும். இவ்வகையான ஆசை ஞானஸ்நானத்துடன் பிறசமயப்பிள்ளை இறந்தால் இரட்சணியம்அடையும்என்பது நிச்சயம். இன்னும் பிறசமயப்பிள்ளை தண்ணீர்ஞானஸ்நானம் பெறாது, சத்தியவேதத்திற்காகத் தன் உயிரைத் தற்பரித்தியாகம் செய்து வேதசாட்சியாய் மரிக்கும்போது, இரத்தஞானஸ்நானம்பெற்று இரட்சணியத்தை அடையும். ஆனால், மேற்சொல்லியமூன்றிலும் ஒன்றையாவது பெறாத என்பிறசமய உடன்மாணவிக்கு மோட்சம் இல்லைஎன்பது சத்தியம்.

C. பின்வரும் வினாவிற்கு 30-7-51-க்குமுன் **B. E. Alfred, O. M. I.,** Bishop's House என்ற விலாசத்திற்கு விடையனுப்ப வேண்டும்.

வினா: ஒருவகையான ஞானஸ்நானமும் பெறாமல் மரித்த குழந்தையின் கதியென்ன?

## தலைவில்லுத் திருசேத்திர மகாத்மியம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இன்னும் சில ஆண்டுகள் சென்றபின் சந்தானுள் நாயகி மறுபடியும் அவனுக்குத் தரிசனையாகித் தன் தலத்தைச் சிறப்பிக்கும்படிகேட்க, அவன் போர்த்துக்கல் தேசஞ்சென்று, பொன் நாணயங்களைப் பெற்றுவந்து குடிசைக்கோயிலையுடைத்துச் சுண்ணக் கல்லால் சிறியதோர் கோயிலைக் கட்டினான். அதன்மேலுஞ்சில ஆண்டுகளுக்குப்பின் மூன்றாம் முறையும் தாயார் காட்சியளித்து "என்இடத்தை நிரந்தரமான தாய் இன்னும் சிறப்பிப்பாய்!" என்றுகூற, அவன் இப்பகுதியைப் பரிபாலித்துவந்த கோவைக் குருவானவரிடஞ்சென்று விஷயத்தைத் தெரிவித்தான். அக்குருப்பிரசாதி தமது இடையறா முயற்சியினால் சனங்களின் சகாயத்தைப்பெற்றுத் தற்போது பிரமாண்டமானதாய்த் தோன்றும் தேவாலயத்தைக் கட்டிமுடித்தார். இது நிகழ்ந்தது 1866-ம் ஆண்டில் என அறியக்கிடக்கின்றது.

அன்றுமுதல் இன்றுவரை இத்திருப்பதியிலே அர்ச். ஆனாள் முனீஸ்வரியின் அனுக்கிரகத்தினால் அநேக புதுமைகள் நடைபெற்று வருகின்றன. இத்தலைவில்லுத் திருசேத்திரத்தின் மகோற்சவமானது வழமைப்பிரகாரம் இவ்வாண்டு ஆடி மாதம் 19-ந்திகதி முதல் 29-ந்திகதியீறாக விமரிசையாய்க் கொண்டாடப்படவிருக்கிறது. விழாவிற்கான ஏற்பாடுகளைத் தற்போதைய திருச்சேத்திரப் பரிபாலனராகவிருக்கும் வண. ஆர்தர் மாட்டீன் பறுணாந்து சுவாமியார் ஊக்கமாகச் செய்துவருகின்றார். 19-ந்திகதி கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமாகும்.

### இலக்கியகழக தலைவர்

கொழும்பு அதிமேற்றிராசன ஐக்கிய சங்கத்து இலக்கியகழகத்தின் தலைவராக விக்கார் ஜெனறலாகிய மிகவண. ஜி. போட்ரின் சுவாமியவர்கள் தெரிவு செய்யப்பெற்றிருக்கின்றார். இதற்குமுன் காலஞ்சென்ற மிகவண. எம். ஜே. லெக்கொக் சுவாமியவர்களே 1945-ம்ஆண்டு தாம்மரிக்கிறவரையில் 25 வருடங்களாக இப்பதவியைவகித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## கோறியாவில் சமாதானம்

— வாஷிங்ரன்

கோறியாவில் சமாதானம் ஏற்படவேண்டும்என்பதே தமது நம்பிக்கை என்றும், சமாதானத்திற்காக அமெரிக்கா இடையருது பாடுபட்டுவருகிறதுஎன்றும் ஜனதிபதி ட்ருமன் அவர்கள் தமது வழக்கமான செய்தி நிருபர்பேட்டியில் குறிப்பிட்டிருக்கிருர். சோவியற்பிரதிநிதி மாலிக் தெரிவித்த யோசனைகுறித்து, ருஷிய வெளிநாட்டுமந்திரி குரோமிகோ விளக்கம்தந்துள்ளார். போர் அரங்கிலுள்ள தளபதிகளிடையே போர்நிறுத்தப்பேச்சுக்கள் நடப்பதை ஆதரிப்பதாகக் குரோமிகோ கூறுகிருர். இவரின்கருத்து ஆராயப்பட்டு வருவதாக யு. எஸ். இராசாங்கபகுதி அறிவித்துள்ளது.

## சீனவின் பொருளாதாரம்

— நியூயோக்

சீனர்கள் தங்கள் தேசீயஆற்றலைக் கோறியாச்சாகசத்தில் வீணடித்துவருவதனுல், வாழ்க்கை மேம்பாடுபெற அவர்கள் கொண்டுள்ளநம்பிக்கை நிறைவேருத நிலைமையில் இருக்கிறது என "நியூயோக் ரைம்ஸ்" தனது தலையங்கத்தில் எழுதுகிறது. அது மேலும் கூறுவதாவது: சீனவின் 50 கோடி மக்களுக்கும் வாழ்க்கைத்தர உயர்வு கிடைக்கவேண்டுமாயின், அவர்கள் தங்கள் கைத்தொழில்களைப் பெருக்கவேண்டும். புதிய உற்பத்திச்சாலைகளையும், றெயிற்பாதைகளையும், வீதிகளையும் நிர்மாணிக்கவேண்டும். ஆனுல், அவர்கள் தங்கள் தேசீயதிறனைக் கோறிய ஆக்கிரமிப்பில் விட்டுக்கொடுத்து வீணடித்து வருவதனுல், சீனவின் ஆக்கவேலைத்திட்டங்கள் அசாத்தியமாகும். ருஷியாவுடன் சமீபத்தில் இரண்டு வர்த்தகஒப்பந்தங்கள் செய்துகொண்டிருப்பதாகவும், சோவியற்அரசின் நேசத்திற்கு அவைகள் தக்கசான்றுகளெனவும் மா-ஸே-துங் பிரசாரகர்கள் பறைசாற்றுகிருர்கள். ஆனுல், அவற்றின்தன்மை சீனவை ருஷியா சுரண்டுவதே. ருஷியா யுத்தஆயுதங்களைக் கொடுத்துச் சீனவின் உணவுப்பண்டங்களையும், டங்ஸ்ரன், ஈயம்போன்ற லோகங்களையும் பெறும். சீனவைஆளுகிறவர்கள் எப்படி ருஷியாவின் இரும்புக்கரங்களில் சிக்கிக்கொண்டுள்ளனர்என்பதை இது காட்டுகிறது.

## நிச்சயமற்ற வாழ்க்கைநிலை

— நியூயோக்

மஸ்கோவின் ஆதிக்கத்திலுள்ள சார்புநாடுகளில் வாழ்க்கைநிலை எவ்வளவு நிச்சயமற்றதாய் இருக்கிறது என்பதற்கு இன்னெரு உதாரணமாக, பல்கேரியாவில் ஒருசம்பவம் நிகழ்ந்திருக்கிறது. இதைப்பற்றி "நியூயோக் ரைம்ஸ்" தனது தலையங்கத்தில் எழுதுவதாவது: சோவியற்இராச்சியத்தில் அதிகாரமகுடம் தரித்தவன்பாடு என்றுமே திண்டாட்டந்தான். விவசாய மந்திரியையும், சமூக - பொருளாதார மந்திரியையும் பல்கேரிய கம்யூனிஸ்த அரசாங்கம் பதவிகளைவிட்டு நீக்கியுள்ளது. விவசாயமந்திரி சென்றமாதத்தில் பதவிக்குவந்தார். இந்தப் பதவிநீக்கங்கள் எதைக்குறிக்கின்றன? பல்கேரியாவில் விளைந்துள்ள பொருளாதார சங்கடங்களையே குறிக்கின்றன. கம்யூனிஸ்த பொருளாதாரத் திட்டங்களின் தோல்வியையே இந்தப் போக்குகள் குறிக்கின்றன. எனினும், தனது ஆதிக்கத்திலுள்ள கிழக்கு ஐரோப்பியநாடுகளில் அதியற்புதமான சுபீட்சம்நிலவுவதாகச் சோவியற் பிரசாரயந்திரம் இடையருதுகூறுகிறது. இரண்டுமந்திரிகளைப் பதவியிலிருந்து விலக்கியிருப்பதானது, கம்யூனிஸ்த நாடுகளில் காரியங்கள்நடக்கும் அழகிற்கு அத்தாட்சியாய் இருக்கக்கூடுமல்லவா?

## அமெரிக்காவின் கொள்கைகள்

— ஜெனிவா (சுவிற்சர்லாந்து)

அமெரிக்க வெளிநாட்டுக்கொள்கையின் மூன்று குறிக்கோள்கள் — விடுதலை, மாந்தர்வாழ்க்கை மேம்பாடு, சமாதானம் ஆகியவையேஎன அமெரிக்க அரசாங்க தொழில்மந்திரி டோபின் ஆணித்தரமாகக்கூறுகிருர். இங்கு நடைபெற்ற சர்வதேச தொழில்ஸ்தாபனமகாநாட்டில் பேசியபோதுதான் அவர் மேற்கண்டவாறு சொன்னுர். "உயிரினும் இனிய சுதந்திரத்தை விற்று உலகசமாதானத்தை அடைவதானுல், அப்படிப்பட்ட சமாதானம் வேண்டவேவேண்டாம். இன்னெரு பெரும் யுத்தத்தினுல் உலக நாகரீகம் தரைமட்டமாகுமானுல், சமாதானமும், வாழ்க்கைமேம்பாடும் பொருளற்றவையாகிவிடும். எனினும், சமாதானத்திற்காகச் சுதந்திரத்தை விற்க முடியாது. எனவேதான், சுதந்திர ஆர்வமுள்ள மக்கள் முன்சொன்ன மூன்றுகுறிக்கோள்களுக்காகவும் பாடுபடவேண்டும்."

"சுதந்திரப்போராட்டத்தை அமெரிக்கா தொடர்ந்துநடத்தப்போகிறது. சமாதானத்தை நிலைநாட்டுவதில் நாங்கள் கருத்தொருமித்து ஈடுபட்டிருக்கிறோம். எங்கள் வெளிநாட்டுக்கொள்கைக்குச் சமாதானஆர்வமே ஆஸ்திவாரம். இங்குகுழுமியுள்ள சுதந்திரநாடுகளின் படைகள் கோறியாவிலே இக்கணம் போராடிக்கொண்டிருக்கிறபோதிலும், சமாதானத்தை நிலைநிறுத்தமுடியும்என்று நாங்கள் இன்னமும் நம்புகின்றோம். சுதந்திரநாடுகளின்படைகள் ஆக்கிரமிப்பை முறியடிக்கப் போராடிக்கொண்டிருக்கின்றன. ஆக்கிரமிப்பினுல் அனர்த்தமே விளையும்என்பதை ஆக்கிரமிப்பாளராகக்கூடியவர்களையும் எச்சரிக்க அவைகள் போராடிக்கொண்டிருக்கின்றன. உலகயுத்தம் ஏற்படுவதைத் தடுக்கும்பொருட்டு, அடக்கமான போராட்டத்தில் அவைகள் இறங்கியுள்ளன. சகிக்கவொண்ணுத தூண்டுதலைப் பொருட்படுத்தாது அவைகள் நடந்துகொள்வதிலிருந்தே, அதாவது பொறுப்புடன் நடந்துகொள்வதிலிருந்தே — மூன்ருவது உலகமகாயுத்தத்தைத் தவிர்ப்பதில் அவைகள் கொண்டுள்ள தெளிவானஉறுதி நன்கு புலனுகிறது.

"சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக எந்தநாடுகள் பாடுபடுகின்றன? சமாதானத்தைச் சீர்குலைக்க எந்தநாடுகள் கிளம்பியிருக்கின்றன? என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கவேண்டும். அமெரிக்கா படையெடுக்குமென்றபீதி எந்தநாட்டிற்கும் இருக்கவேண்டியதில்லை. அமெரிக்காவைச்சுற்றி இரும்புத்திரை இல்லை. பிறநாட்டு அரசாங்கங்களுக்கும், மக்களுக்கும் எதிராக அமெரிக்கா சதிசெய்யவில்லை. எங்கள் நாட்டில் இரகசியம் இல்லை. எங்கள் நாட்டை, எங்கள்நாட்டாரை யார் வேண்டுமானுலும் துருவிப்பார்க்கலாம். பரஸ்பரஒத்துழைப்பினுலேயே, சுதந்திரமாகக்கலந்து மக்கள் பழகுவதனுலேயே உலகில் சௌசன்யமும், சமாதானமும் தோன்றும்என அமெரிக்க மக்களாகிய நாங்கள் கருதுகிறோம். எதிர்காலத்தில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. காலப்போக்கில் இரும்புத்திரைக்குள் சிக்கியுள்ள மக்களும் சுதந்திரநாட்டப் பெருக்கினுல் எழுச்சியுற்று விடுதலையின்பயனைச் சகல உலகமக்களுடனும் [illegible] தர்ப்பம்பெறுவார்கள் என நம்புகிறோம்.

## வண. S. J. வேதநாயகம் சுவாமியவர்களின் குருத்துவ வெண்பொன் யூபிலி விழா

வண. S. J. வேதநாயகம் சுவாமியவர்கள் குருத்துவாபிஷேகம்பெற்ற இருபத்தைந்துஆண்டு நிறைவுவிழா சென்ற ஆனிமாதம் 24-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை வரலாயிற்று. அத்தினத்தைக்காண, முந்தஅதைக்கொண்டாட, அவரிடம் இகபரநன்மைகள் அடைந்தஉற்ருர், உறவினர், சிநேகிதர், விசுவாசிகள் அநேகர் ஆவலோடு காத்திருந்தார்கள். ஆனுல், அவ்விழாவை முதலிற் கொண்டாட மிருசுவிலுக்கே பாக்கியம்கிடைத்தது.

அதைச் சிறப்பாய்க் கொண்டாடுவதற்காகப் பலவாரங்களாகக் கோவிலும், குருமனையும், பாடசாலையும் புதுப்பிக்கப்பெற்று அழகுசெய்யப்பட்டன. குறித்ததினத்துக்கு முன்னர் மாலைகளாலும், துவசதோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுப் பொன்னுலகம்போல மிருசுவிற் கோவில்வளவு காட்சிஅளித்துக்கொண்டிருந்தது.

யூபிலி விழாவன்று காலை 8 மணிக்கு அதிவண. வி. இம்மனுவல் சுவாமியவர்களும், வண. B. E. அல்பிறெட்சுவாமியவர்களும் டீக்கன் சப்டீக்கனுகநிற்க, யூபிலிநாயகரவர்களால் தேவதோத்திரபாடற்பூசை நிறைவேறியது. திவ்விய பூசையின்போது வண. M. S. நல்லையா சுவாமியவர்களால் குருத்துவத்தின் மேன்மையைப்பற்றியும், யூபிலிநாயகரது சேவைகளைப்பற்றியும், விசேஷமாகஅவரிடத்தில் காணப்பட்ட அரிய குணங்களையிட்டுப் பாதுகாவலன் பத்திரிகாசிரியர் எழுதியவை மிகப்பொருத்தமானவை என்பதுபற்றியும், குருத்துவ அழைத்தலுக்கு இவ்விடத்திலுள்ள பெற்ருேர் தம்பிள்ளைகளை வழிநடத்தவேண்டுமென்பதுபற்றியும் அரிய பெரிய பிரசங்கமொன்று செய்யப்பட்டது. கோவில் ஆராதனையின்போது ஒலிபெருக்கி உபயோகிக்கப்பட்டு, இடைவேளைகளில் அதிலிருந்து இனிய கானமும் பொழிந்துகொண்டிருந்தது.

காலை 10 மணிக்கு யூபிலிநாயகரால் "தெதேயும்" எனும் தேவதோத்திரகீதம்பாடித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. பின்னர் திரளானமக்கள் குழுமியிருந்த பாடசாலை மண்டபத்துக்கு யூபிலிநாயகர் அழைத்துச் செல்லப்பெற்று அங்கு பகிரங்கஉபசாரணை நடைபெறலாயிற்று. உயர்மேடையிலே பலவிடங்களிலுமிருந்துவந்த அநேக குருப்பிரசாதிகள் புடைசூழத் தாரகைநடுவில் விளங்கும் தண்மதியென யூபிலிநாயகரவர்கள் எழுந்தருளியதும திரு. S. சிமியோன்பிள்ளை அவர்களை முதலாகக்கொண்டு அநேகர் முகம்மறையத்தக்கதாக மலர்மாலைகள் சூட்டிநின்ருர்கள். திரு. P. M. அந்தோனிப்பிள்ளை ஆசிரியர்தலைமையில் பாடசாலைச்சிருர்கள் இனியபாக்களைப் பாடினர்கள். திரு. R. T. இன்னுசிமுத்து கணக்கர் அவர்களால் வெண்பொன்னில் பதிக்கப்பெற்ற அழகிய வேலைப்பாடமைந்த யூபிலிவாழ்த்துப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது.

அவ்வேளை திரு. N. லூயிஸ் ஆசிரியர் அவர்களால் பணமுடிப்பும், அன்பர்கள்பலரால் பலஅன்புப்பரிசுகளும் தெட்சணையாக வழங்கப்பட்டன. அதன்மேல் திரு. S. L. இராசநாயகமவர்களாலும், எம்பகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. V. குமாரசாமியவர்களாலும் யூபிலிநாயகரைப் பாராட்டிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. திரு. V. குமாரசாமியவர்கள் தமதுபேச்சினிடையே தமக்குத்தெரிந்த, கடந்த 30 வருடங்களிடையே மிருசுவிலில் இதுபோன்ற சிறந்த ஒரு கொண்டாட்டத்தைத் தாம் காணவில்லையென்றும், சுவாமியவர்கள் சமூகசேவைக் கூட்டமொன்றிற்குத் தலைமைவகித்தபோது அவர்களோடு தமக்கு முதற்பழக்க மேற்பட்டதென்றும், அவரது சமூகசேவையைப்பற்றிச் சமீபத்தில் பிரான்சுக்குப் போனபோது ஒரு கூட்டத்தில் தாம் பாராட்டிப் பேசியதாகவும் குறிப்பிட்டார்.

ஈற்றில், யூபிலிநாயகரவர்கள் எழுந்து, தாம்பெற்ற குருத்துவபதவியின் மேன்மையையிட்டு இப்பெரிய கொண்டாட்டத்தை மிருசுவில் கிறீஸ்தவர்கள் செய்ததாகத் தாமெண்ணுவதாகவும், தமக்குச்செய்த யாவற்றிற்கும் தாம் நன்றியறிந்திருப்பதாகவும், மிருசுவிலிலுள்ள பெற்ருேரும் சிருரும் குருத்துவத்தின் மேன்மையை உணர்ந்து, அதனுல் இவ்விடத்திலிருந்து வருங்காலம் அநேக குருப்பிரசாதிகள் தோன்றவேண்டுமென்ற எண்ணத்தால் இந்தஇடத்தின் முதல் குருப்பிரசாதியாகிய வண. B. E. அல்பிறெட் சுவாமியவர்கள் இக்கொண்டாட்டத்திற்காகப் பெரிதும் உழைத்ததையிட்டுத் தாம் அவருக்கு விசேடநன்றி சொல்லுவதாகவும்கூறி, தமது திருக்கர ஆசீர்வாதம் அருளலானுர்.

மத்தியானம் பிரமாதமான விருந்தொன்று விமரிசையாக நடைபெறலாயிற்று. அதில் மகாவந். எமது மேற்றிராணியாண்டவர் அவர்களும், 31 குருப்பிரசாதிகளும், செவாலியர் S. அருளானந்தம்அவர்களும் சமூகம் கொடுத்திருந்தார்கள். எங்கள் யூபிலிநாயகரவர்கள் எல்லா நன்மைகளும் பெற்று, 50-ம்வருட செம்பொன் யூபிலியையும்காண எல்லாம்வல்லகடவுள் அருள்செய்வாராக.

— நிருபர்

## உற்பத்திப் பெருக்கம்

— வாஷிங்ரன்

அமெரிக்க கூட்டுறவு நிர்வாக காரியாலய மாஜிபிரதானி போல் ஜி. ஹொவ்மன் அவர்கள் போர்த்துக்கால் தேச லிஸ்பன்நகரிலே சர்வதேச வர்த்தகர்சங்கக்கூட்டத்தில் நிகழ்த்திய உரையானது அமெரிக்க வர்த்தக வட்டாரங்களின்கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருக்கிறது. அதிலொருபகுதி வருமாறு: உலகின் தேவைப்பண்டங்களில் மூன்றிலொருபங்கு அமெரிக்காவில் உற்பத்திசெய்யப்படுகிறது. இந்த இனத்தில் விளைபொருட்களும், உற்பத்திச்சாமான்களும் அடங்கும். உலகிலே உற்பத்திசெய்யப்படும் சாமான்களில் அநேகமாகச் சரிபாதி அமெரிக்காவில் தயாராகின்றன. ஆனுல், உலகசனத்தொகையில் மூன்றில் ஒருபங்குமக்கள் அமெரிக்காவில் கிடையாது. அதுவுமல்லாமல், உலகநிலப்பரப்பில் மூன்றிலொருபங்கு நிலப்பரப்பும் அமெரிக்காவில்கிடையாது. தவிர மூலப்பண்டங்களில் மூன்றிலொருபங்கும் அமெரிக்காவிடம் கிடையாது. ஆனுல், நம்மிடம் என்ன இருக்கிறது என்ருல், உற்பத்தித்திறன் இருக்கிறது. வேகமாகஉற்பத்திசெய்வதை நாம் 'விரதமாக'க் கொண்டிருக்கிறோம் என்று சொன்னுலும்தகும். உற்பத்திப்பெருக்கம், மனிதனின் வாழ்க்கை வசதிப் பெருக்கத்தைப் படைக்கிறது. யந்திரங்களைக்கொண்டு சாதனைகள்புரிகின்றோம். செல்வத்தைப் பெருக்க, யந்திரங்களைப் பயன்படுத்துவதே வழி. அதிக உற்பத்திச்சாலைகளைப் படைத்து அதிகபேருக்கு வேலை கொடுக்க வேண்டும்.

—இமயமலையிலே உலகின் மகாஉந்நதமான எவறெஸ்ற்சிகரத்தின் மேல் ஏறுவதற்குப் பிரித்தானி மற்றுமோர் தரம் புதிதாகமுயற்சிப்பதாலே அதற்கான ஏற்பாடுகளைப் பிரித்தானிய வெளிநாட்டு மந்திரிகாரியாலயம் நேபாளஅரசாங்கத்துடன் செய்திருக்கிறது. இந்த எவறெஸ்ற் சிகரஏற்றம் உலகப்பிரசித்திபெற்ற அல்ப்பைன் கிளப் ஆதரவில்தான் ஒழுங்குபண்ணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவருடைய கடைசி நாட்கள்

— அழுது —

(சென்றவாரத் தொடர்ச்சி)

கலைமாணிக்கமாயும், குரு திலகமாயும் வாழ்ந்த வண. சுவாமி K. சேபஸ்தியான் அவர்களுடைய அந்தியநாட்களைப்பற்றிய சம்பவங்களே இக்கட்டுரையில் அடங்கியிருக்கின்றன. சுவாமிஅவர்களுடைய அந்தியநாட்களைப் பற்றிய விபரங்களும், அவருடைய உன்னதமான இலட்சியங்களும் இதில் இடம்பெறுகின்றன.

சுவாமிஅவர்களைப்பற்றிச் சாதாரணமாய் என்னிடம்கதைக்கும் நண்பர்கள் 'அவர் ஒரு வெள்ளையன்' என்று படம் பிடித்ததுபோலச் சொல்லிவைத்தார்கள். நான் சுவாமியாருடைய மாணாக்கனு யிருந்ததுமில்லை. அவருடைய விசாரணைப்பங்குகளில் இருக்கக்கூட எனக்கு வயசு காணமற்போய்விட்டது. என்னுடைய சகதர்மினியின் இரத்தசொந்தம்காரணமாய் ஏற்பட்ட தொடர்பைக்கொண்டு நான் சுவாமியவர்களோடு நட்புக் கொண்டாட ஆரம்பித்தபோதே அவர் ஒரு வெள்ளையன்என்பதைப் பரிபூரணமாய் ஒப்புக்கொண்டேன்.

அவருடையபேச்சு, வட்டுக்கோட்டைக்கு வழி சொல்வதற்குப் பதில் கொட்டைப்பாக்குக்கு விலை கூறும் தன்மையாகவோ, வளவளா என்று சாரமற்ற இரசமாகவோ இருப்பதில்லை. வெட்டொன்று துண்டிரண்டாக இருக்கும். எதையும் நிதானமாக யோசித்துக் கொஞ்சமாகப்பேசுவார். தமது உடன்பிறந்தவராயிருந்தாலும் நேர்மை - நீதி - நியாயம் அணுப்பிரமாணமும் தவறமாட்டார். கடமை என்ருல் அதில் அவர் சுவிற்சர்லாந்து மணிக்கூடுகளுக்கு ஒப்பிடக்கூடியவர். பட்டுப் பூச்சிகளின் இறக்கைகளைப் போல் அவருடையஇருதயம் மிக மிருதுவானது. கஷ்டப்பட்டவர்களைக் காணமுன்பே அவர்களின் கண்ணீரைக் கண்டுவிடுவார். மற்றவர்களைப்பற்றிக் குசலம்விசாரிப்பதில் அவருக்கு எள்ளளவுவிருப்பமும் இருப்பதில்லை. ஏதாவது ஒருசந்தர்ப்பத்தில் யாராவது அப்படியொரு பீடிகையை ஆரம்பித்தால் "அது எனக்குத் தேவையில்லாதவிஷயம்" என்று நெற்றிக்கு நேரேசொல்ல அவர் தயங்கமாட்டார். தேவஊழியமே அவருக்குச்செந்தேன்; தனிமையே அவருக்கு இனிமை; சூசைமாதவனே அவருக்கு ஆசையானவன்.

தமிழ்ப்பாஷையிலும் சுவாமியாருக்கு ஒருதாகம்இருந்தது. தமிழ் விழா நிகழ்ச்சிகளைப்பற்றி நான் அவருக்கு ஒவ்வொருதினமும்சென்று விபரிப்பதுண்டு. அதில் வண. தனிநாயகம் அடிகளாருடைய பேச்சையும், ஆராய்ச்சித் திறமையையும் நான் வியந்தபோது அவருக்கு மகிழ்ச்சியினுல் இருதயம் பூரித்துவிட்டது.

சுவாமி அவர்களுக்கு 79 வயதாகியும் அவர் வைத்தியசாலைக்குச்சென்று எந்தவைத்தியரையாவது ஆலோசனை கேட்டதில்லை. இந்தக்காலத்து மனிதர்கள் இதைநம்புவதற்குக்கூடக் கஷ்டப்படுவார்கள். இதனுல் அவர் மருந்துகளில் நம்பிக்கையற்றவரென்பது கருத்தல்ல. தனக்குத் தானே வைத்தியனுயிருந்தார். வேளைதப்பிப் போசனஞ்செய்யும்வழக்கம் அவரிடமில்லை. அவர் சரீரசௌந்தரியத்தை நோருசிபோன்ற வாழ்க்கையினுல் காப்பாற்றிக்கொண்டதால் இறந்தஉடலம் அப்பொழுதுதான் குருப்பட்டம்பெற்ற வாலிபனுடைய தேஜசில் காணப்பட்டது.

* * *

கடந்த 5வருடங்களாகச் சுவாமி அவர்கள் குளமன்காலில் நியமதியாகக் காலம்கழித்துக்கொண்டு வந்தார். சென்ற சித்திரைமாசப் பிற்பகுதியில் காலில்ஏற்பட்ட விஷவாதபருக்களுக்குச் சுதேசவைத்தியம் செய்விக்கும் நோக்கத்தோடு இளவாலைக்குவந்தார். இளவாலையில் சுமார் ஒன்றரைமாசகாலமாகச் சிகிச்சை நடைபெற்றுவந்தது. அவருடைய பிரிய சகோதரியாரும், வண. கட்டளைச்சுவாமியாரும் அவருடைய தேவைகளைக் கவனித்து ஆவனசெய்தார்கள். குறித்தகாலத்தில் என்னுடைய பெரும்பங்கு நேரமும் அவருடனே கழியலாயிற்று. ஒருகுருப்பிரசாதியுடைய கடைசி நாட்களில் அவருக்குப் பணிசெய்வது பாக்கியமானதொண்டாகும். இந்தப் பாக்கியத்தில் அடியேனுக்கும் பங்கு கிடைத்ததுகுறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

ஒருவாரகாலத்தில் அவரைக் குணப்படுத்திவிடுவதாக வைத்தியர்கள் வாக்களித்தார்கள். ஆனுல், குறித்தகாலத்தில் கால்வருத்தம் மிக மோசமான நிலமை அடையவே, சுதேசவைத்திய நம்பிக்கையைச் சுவாமியார் இழந்துவிட்டார்கள். அவருடைய ஆத்ம நண்பனும், அருந்துணையுமாயிருந்த வண. B. J. ஏபிரகாம் சுவாமியவர்களுக்கு எழுதுமாறுசொன்ன கடிதம் ஒன்றில் "சுதேசவைத்தியர்களின் கொடுமையினுல் எனது கால்களில் வருத்தம்குறைந்தபாடாயில்லை" என்று எழுதச்சொன்னுர். ஐதிரபாத்தில் ஆங்கிலரீதியில் சுதேசவைத்தியமருந்துகள் தயாராகின்றன. அந்த மருந்துகளின் விசேஷஆற்றலைச் சுவாமியார் ஏலவே பரீட்சித்திருந்தார். அங்கு தயாரிக்கப்பட்ட ஒருசேர்வைமருந்தை 3 நாட்களாய்க் காலில்போட்டதும் காலில் தழும்புகள்கூட இல்லாமற் போய்விட்டன. அந்தமருந்தின் அபூர்வமான சக்தியை முதல்நாள்வியந்த சுவாமி அவர்கள் மறுநாள் சுவாசஇழுப்பினுலும், மாரடைப்பினுலும் முதல்முதலாக வருந்தினுர்.

அரசினர் வைத்தியசாலையில் வெளிநோயாளரின் பிரதமடக்டர் கிறிசோஸ்தோம் அவர்கள் சுவாமியாருடைய பிரியநண்பன். அவருடைய ஆதரவினுலும், மேற்றிராசன பொதுப்பணபரிபாலகரான அதிவண. N. யோசேப் சுவாமியாருடைய பேருதவியாலும் சிகிச்சைபெறவந்த சுவாமி செபஸ்தியான்அவர்கள் மாரடைப்பு நோயின்றி 5 நாட்கள் சுகமாயிருந்தார். ஆனுல், உடல் பலவீனமுற்றுக் காணப்பட்டது. 'பெனிசிலின்' மருந்து அவருக்கு நற்சுகத்தைஅளிக்குமென்று நாங்கள் நம்பிக்கைகொண்டோம்.

ஞாயிற்றுக்கிழமைகாலை சுவாத இழுப்பு அதிகமாயிருப்பதாகச் செய்தி வரவே, அவருடையசகோதரியும், நாங்களும் கண்ணீரும்கம்பலையுமாக நின்றபோது அவர் எங்களை ஆசீர்வதித்து, கையை முத்திசெய்யத்தந்து ஆறுதல் கூறினுர். அவருடைய அந்தியவேளையில் அவருடையஅருகிலேயே இருக்க விரும்பிய அவர்சகோதரியின் விம்மல் பொருமல்களைக்கண்டு,

"ஆண்டவர் அழைக்கிறநேரத்தில் நான் அவரிடம் போகவேண்டும். கடவுள் போதியகாலத்தை எனக்களித்திருக்கிறுர். சந்தோஷமாக நான் அவரிடம் போகவேண்டும், நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? நல்ல மரணம்தான் கடவுள் நமக்குத்தரும் கடைசிக் கொடை. நீங்கள் மனச்சமாதானமாய்ப்போய் எனக்காகப் பிரார்த்தியுங்கள்" என்றுர்.

மறுநாள் சாயந்தரம் நான் சுவாமியாரைப் [illegible] அவர் என்னை [illegible] பிடித்துக்கொண்டே "மாஸ்றர்! நீர் கவலைப்படவேண்டாம். அவஸ்தைப் பூசுதல் என்சரீரத்துக்குக்கூடச் சுகமளித்திருக்கிறது. எழுந்துநிற்கவும், நடக்கவும் என்னுல்முடியும். ஆண்டவர் எனக்குஇன்னும் நாட்களைத்தரச் சித்தமானுல் புத்தகத்தில் இரண்டாவதுபாகத்தை எழுத எண்ணுகிறேன். ஆனுல், வேறுபலர் வருங்காலத்தில் என்னுடையவேலையைத் தொடரவருவார்கள். நீர் உமது வீட்டாருக்கு எனதுசுகத்தைத் தெரிவியும்" என்று அனுப்பினுர். அப்பொழுது சுவாமியாருடையமுகம் மலர்ந்திருந்தது. மரணக்கலக்கம் அவரிடம் ஒருதுளிகூடக் காணப்படவில்லை. ஆனுல், நான் அவ்விடத்திலிருந்து நீங்கிய இரண்டுமணி நேரத்தில் அவருடையஆன்மா சாந்தியடையலாயிற்று. இந்தஇடைநேரத்திலே மகாவந். மேற்றிராணியாண்டவரைக்கண்டு ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டார்.

சுவாமி அவர்களுக்கு வைத்தியசாலையில் அரும்பணிபுரிந்த ஒரு உறவினர் அவர்பிரிந்த துயரசெய்தியை எங்களுக்குத்தெரிவிக்கவே, எங்கள் இருதயத்தின் கபாடங்களுடைந்து கதறினேம். இந்தச்சம்பவத்தை அடியேன் அறிவித்தபோது, சுவாமியாருடைய நன்மாணுக்கர்களான இளவாலைக் கட்டளைக்குருவரும், வண. இல்லறிசுவாமி அவர்களும் கண்ணீர்த்துளிகளோடு என்னைப்பார்த்தார்கள். அவ்வேளை துக்கமணி ஆகாயவீதியில் இந்தத் துயரசங்கதியை அறிவித்துக்கொண்டிருந்தது. அவருடையஆன்மா சாந்தியடைக!

## காப்பிக்குப்பதில் பானம்

காப்பிப்பானம் அடிக்கடி அருந்துவது சரீரத்திற்குக் கெடுதியைவிளைக்கும். அவ்வப்போது அது களைப்பைப் போக்கி ஒருவிதமானதென்பை அளிப்பதுபோலத் தோன்றுகிறது. ஆயினும், அதுஉண்மையில் சரீரத்துக்கு நன்மை செய்வதேயில்லை. அதில் 'கபேய்ன்' என்ற கெடுதலானவஸ்து உண்டு. ஆகையால் காப்பிக்குப்பதிலாக அடியிற்கண்டபானத்தைப் பருகுவது நன்மையை விளைப்பதுமன்றிச் செலவுங்குறையும்.

| | | |
|---|---|---|
| பறங்கிப்பட்டை அல்லது பறங்கிச்சக்கை | பலம் | 5 |
| நன்னுரிவேர் | ,, | 2 |
| சுக்கு | ,, | 2 |
| ஏலரிசி | ,, | 1 |
| வெட்டிவேர் | ,, | 1 |
| தனியா அல்லது கொத்தமல்லிவிதை | ,, | 1 |
| சோம்பு அல்லது பெருஞ்சீரகம் | ,, | 1 |
| ஜேஜாமொட்டு | ,, | 1 |
| ஆவாம்பூ | ,, | 1 |

இச்சரக்குகளை வெயிலில் உலர்த்திய [illegible] இடித்துப் பெரும் [illegible]ளாக்கி, ஒருதகரடப்பி அல்லது பளிங்குக்குப்பியில் அடைத்து வைத்துக்கொண்டு காலையிலும் மற்றும் வேண்டும்வேளைகளிலும் சிறங்கையளவெடுத்துத் தண்ணீர்விட்டுக்காய்ச்சிக் கஷாயமிறக்கிப் பாலும்சர்க்கரையும் இட்டுப் பருகுக.


BEST

CROWN BRAND

TILES

IMPORTER & STOCKIST :-

MRS. EMMANUEL TIRUCHELVAM

"TIRUCHELVAM BUILDINGS"

MAIN STREET, JAFFNA.

INDIAN BRICKS & FLOORING TILES ALSO AVAILABLE.

T'gram: Tirchelvam. T'phone: 52.




வதிரி

சீமாம்பிள்ளை சுவானப்பிள்ளையின்

4-ம் வருட

மரணஞாபகம்

விருத்தம்

பொற்புறுதல் வதிரிநகர்பூத்தே சீர்த்தி
பொங்கி மிளிர் புக்ககத்தின் புதுமை கண்டு
கற்பினுக்கோர் அரசியென வாழ்ந்தேயிந்தக்
கடல்கடந்தி கத்தனது கமலபாதம்
அற்புவைத்துச் சென்ற எங்கள்சுவானப் பிள்ளை
ஆரமுதே! ஆண்டு நாலானபோதும்
கற்பனைக்கு மெட்டாத கனக ரூபம்
கண்ணிருந்தே தருங்காட்சி மறக்கலாமோ?

"சீவியத்தில் அவர்களைநாம் நேசித்தோம். நம்முடைய செபங்களால்கர்த்தரின் வீட்டுக்குள் அவர்களைஇட்டுச் செல்லும்வரை நாம் அவர்களைக் கைவிடாதிருப்போமாக.

(அர்ச். அம்புறோஸ்)

இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளும், மற்றும்இனசன சிநேகிதர்களும் அவவின் ஆன்மசாந்திக்காக வேண்டிக்கொள்வார்களாக.

கவனிப்பு:—19-7-51 காலை 6 மணிக்கு வதிரி அர்ச். அந்தோனியார்கோவிலில் ஒருதுக்கப் பாடற்பூசை நிறைவேறும்.

இவவை இழந்து பிரலாபிக்கும்
நேசபத்தா, மகள், மருமகன்,
சகோதரர்கள், மைத்துனர்.

—இந்தியாவிலே டில்லி நகரைச் சேர்ந்த மஸிகார் எனுமிடத்திலுள்ள கத்தோலிக்கமாதிரிக்கமத்தில் மிஷனரிமாரால் உற்பத்திசெய்யப்பெற்ற முதற்கோதுமைவிளைவு முழுவதும் இலவசமாகச் சனங்களுக்குப் பங்கிடு செய்யும்படியாக இந்தியஉணவுமந்திரியாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

—பரிசுத்தநாட்டிலே ஜெத்செமனிய பூங்காவனத்திலின்ற ஒலிவமரங்கொண்டுசெய்யப்பட்ட சிலுவை ஒன்றைப் பரிசுத்தபிதா சமீபத்தில் ஆசீர்வதித்திருக்கின்றுர். இதுமெக்சிக்கோதேச யாத்திரிகர்களாலே பரிசுத்தநாட்டிலிருந்து வத்திக்கானுக்கு எடுத்துக்கொண்டுபோகப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச். பரலோக மாதா பந்தி

நாவாந்துறை

—:—

## 1950-ம் ஆண்டுக்கான 40 ம் வருட அறிக்கை

—※—

இப்பந்தியின் 40-ம்ஆண்டு நிறைவு விழா 17-6-51 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் சென்மேரிஸ் ஐக்கிய கயிற்றுக்கைத்தொழில் பெண்கள் பாடசாலையில், பலாலி, அரசினர்ஆசிரிய கலாசாலை அதிபர் P. சவிரிமுத்து அவர்கள் தலைமையில் நடந்தேறியது. ஞானத்தலைவர் வண. வி. ஆர். தார்சீசியஸ் சுவாமியவர்களும், சகோதர பந்திகளின் பிரதிநிதிகளும், உபகாரிகள் பலருஞ் சமுகமாயிருந்தனர். செபமும், நல்வாசினையும் முடிந்தபின் வருடாந்த அறிக்கை, வரவுசெலவுக்கணக்கு வாசிக்கப்பட்டன.

ஞானத்தலைவர் பந்தியின்சேவைகளை விதந்துபாராட்டி அதன் கருமங்களை நடாத்தத் தனிப்பட்ட ஓர் இடம் தேவைப்படுகிறதென்றும், அதற்குத் தம்மோடு கிராமத்தவர்களும் ஒத்துழைத்தால் கூடியசீக்கரம் ஓர் இடத்தைக் கண்டுகொள்ளலாமென்றும் கூறினர்.

தலைவர் அவர்கள் தருமசபையின் நோக்கம், அதனாலுண்டாகும் நன்மை, அங்கத்தவர்கள் அடையும் பேறுபலன் என்பனவற்றைவிளக்கி அரியதோர் உபந்நியாசஞ் செய்தார். பந்தியின் காரியஅங்கத்தவர்கள் தொகை மிகக் குறைவாய் இருப்பதினால் கிராம இளைஞர்கள் அங்கத்தவர்களாக அதிற் சேர்ந்து உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

தலைவர்செய்த உபந்நியாசத்தின் பொருளமைதியைச் சஞ்சூசையப்பர் பந்தி அக்கிராசனர் எடுத்துக்காட்டி அஃது தருமசபை அங்கத்தவர்கட்கு உயர்ந்தவோர் படிப்பினையைத் தருவதெனக் கூறித் தமது பந்தியின்பேரால் பரலோகமாதா பந்தியார்க்கு நன்றிசாற்றினர். ஆசிரியர் என். எஸ்தாக்கி அவர்கள் தலைவர், ஞானத்தலைவர், சகோதர பந்தியர், உபகாரிகள் அனைவர்க்கும் நன்றி கூறியதோடு செபத்தின்பின் விழா இனிது நிறைவெய்தியது.

அறிக்கை வருமாறு:

**முன்னுரை:** எங்கள்பந்தி 1910-ம் ஆண்டு ஆரம்பமாகி இதுவரை நாவாந்துறையிலும், பிறஇடங்களிலுமுள்ள கிறீஸ்தவர்கள், மற்றும் பிறமதஸ்தர்களிடையே தனது ஞானத்தொண்டையும், தருமதொண்டையுஞ்செய்து வந்திருக்கிறது. "உனது வலது கைசெய்வதை உன் இடதுகை அறியாதிருக்கட்டும்" என்பது கிறீஸ்துநாதரின் மணிமொழியாகும். அதற்கேற்ப, முன்னர் எங்கட்குத் தனியிடமிருந்து, அதனால் எங்கள் தருமதொண்டும் இலைமறைகாய்போல் நடைபெற்று வந்தது. ஆனால், இப்போது எங்கள் பந்திக்குத் தனிப்பட்ட இடம் இன்மையால் அதன் முன்னேற்றத்திற்கும், மறைமுகமாகச் செய்யவேண்டிய தருமதொண்டுக்கும் எப்போதும் பலஇடையூறுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. பொதுச்சபையாரும், சகோதரபந்தியாரும், எமது கிராமத்தவரும் எங்கள்தொண்டின் காத்திரத்தையும், நலன்களையும் உணர்ந்து இவ்விடையூறுகளை நீக்க முயற்சிக்குமாறு வேண்டுகின்றோம்.

பிடியரிசித் தண்டலில் கிடைக்கும் அரிசி எங்களால் அத்தியாவசியம் தாபரிக்கவேண்டிய ஏழைகட்குப் போதியதன்று. எங்கள்கிராமத்திலுள்ள ஏழைக்குடும்பங்களின் தொகையைக் கவனிக்கும்போது, அரிசி மிகச்சொற்பமென்றே சொல்லவேண்டியிருக்கின்றது. தருமசீமாட்டிகளான சகோதரிகள் உலையில்அரிசி போடும்போது கருணைகூர்ந்து ஒருபிடி அரிசிபோட்டுச் சேகரிப்பார்களானால் அதிகமான ஏழைகளின் பசியைப்போக்குவோம் என்பதில் ஐயமில்லை.

**அங்கத்துவம்:** மகிமை அங்கத்தவர்கள் தொகை 7. காரியஅங்கத்தவர் தொகை 5. கூடிய கூட்டங்களின் தொகை 40. வரவுச்சராசரி 4.

**உதவி பெறுவோர்:** 37 ஆட்களைக் கொண்ட 16 குடும்பங்கட்கு நிரந்தரமாகவும், பணமாகவும், உணவாகவும், உடையாகவும் உதவி செய்யப்பட்டுள்ளது. தரித்திரரை 700 முறையும், வியாதிஸ்தரை 300 முறையும், வேறு தருமவேலைகளை 243 முறையும் தரிசித்தோம்.

**பிடி அரிசி:** சேர்க்கப்படும் அரிசி கொண்டு வாரந்தோறும் கொடுபடும் அரிசியானது தாபரிக்கப்படும் குடும்பங்கட்கு இருநாளைக்கென்கிலும் போதாதிருப்பதை மிகுந்த துக்கத்துடன் அறியத்தருகின்றோம்.

**பணஉதவி:** உபகாரிகளினதும், வண. கட்டளைச் சுவாமியாரினதும் தருமப்பணங் கொண்டு சிலர் தொழில் தொடங்குவதற்கும், அந்தரித்தோர் தங்கள் ஊர்போய்ச் சேர்வதற்கும், வயோதிபர் சாலைக்கும், உடைகட்கும் உதவி செய்யப்பட்டுள்ளது.

**நத்தார்த் தண்டல்:** நத்தார்காலத்தில் எமது கிராமத்திலும், பட்டணப் பகுதியிலும், ஊர்காவற்றுறை, காரம்பன் பகுதிகளிலும், உபகாரிகளிடத்திலும் சேர்த்தபணங்கொண்டு புடவையாகவும் பணமாகவும் உதவினோம்.

**ஆத்துமாக்கள் பூசை:** உத்தரிக்கிறஸ்தலஆத்துமாக்கள் பூசைக்காக எமது கிராமத்தில் சேகரித்தபணம் 124 ரூபா. இப்பணங்கொண்டு 41 பூசைகள் செய்வித்தோம்.

**பின்னுரை:** எம்தருமபந்திக்கு இவ்வூரிலும், பிறஇடங்களிலுமிருந்து உதவிசெய்துவருகின்ற எமது உபகாரிகட்கும், மகிமை அங்கத்தவர்கட்கும், எங்கள்பந்திக்கு ஞானப்பிதாவாயிருந்து அருந்தொண்டாற்றிவரும் கட்டளைக்குரவர் வண. ஆர். வி. தார்சீசியஸ் சுவாமியவர்கட்கும், எங்கள் பந்திக்குப் பேருதவிசெய்து ஊக்கப்படுத்தி வருகின்ற பொதுசபை அக்கிராசனர், காரியதரிசி, தனாதிகாரி, அவர்கட்கும், சஞ்சூசையப்பர், சந்தியோகுமையோர், கார்மேல்மாதா பந்திகளின் அங்கத்தவர்களாகிய ஞானச்சகோதரர்கட்கும், எமது தருமதொண்டுகளையும், கூட்டங்களையும் நடாத்த இடவசதி தந்த நாவாந்துறை சென்மேரிஸ் சனசமுகநிலைய அங்கத்தவர்கட்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றிக்கடனைச்சமர்ப்பித்து, இறந்தும் எம்மனதைவிட்டகலா வண. இ. குருசோ விறதர் அவர்களின் ஆன்மஇளைப்பாற்றிக்காகப் பிரார்த்தித்து முடிக்கின்றோம்.

பந்தியின் காரியஅங்கத்தவர்கள்

### வரவு செலவுக்கணக்கு

வரவு

| | ரூ. ச. |
|---|---|
| அரிசி | 318-20 |
| மகிமை அங்கத்தவர் உதவியது | 70-00 |
| காரிய அங்கத்தவர் | 18-50 |
| உபகாரிகள் | 40-06 |
| அந்தோனியார் தருமஅப்பத்திற்காகக் கட்டளைச்சுவாமியார் | 93-99 |
| நத்தார் வரவு | 85-00 |
| ஆத்துமாக்கள்பூசைத்தண்டல் | 124-00 |
| 1949-ம்ஆண்டு மார்கழி 31-ந் திகதி கையிருப்பு | 53-67 |
| மொத்தம் | 803-42 |

செலவு

| | ரூ. ச. |
|---|---|
| பணஉதவியும், உதவிய அரிசியின் பெறுமதியும் | 374-15 |
| வஸ்திரச் செலவு | 55-00 |
| அந்தோனியார் தருமஅப்பம் | 3-00 |
| ஆத்துமாக்கள் பூசை | 124-00 |
| வயோதிபர் சாலைக்கு | 11-75 |
| புஸ்தகச் செலவு | 33-00 |
| நத்தார்ச் செலவு | 40-00 |
| அச்சு, முத்திரை, தபால், எழுத்து வேலைச் செலவு | 29-95 |
| 1950-ம்ஆண்டு மார்கழி 31-ந் திகதி கையிருப்பு | 132-57 |
| மொத்தம் | 803-42 |

## Order Absolute in the First Instance

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the Last Will and Testament of the late Deogupillai Arulanandam Rasiahpillai of Karampan, Kayts

Deceased

Testamentary Jurisdiction } No. 1297

Elizabeth Muththammah, widow of D. A. Rasiahpillai of Karampan, Kayts

Petitioner

This matter coming on for final determination before V. S. Jeyawickrama Esquire, District Judge, Jaffna, on the 4th day of April 1951 in the presence or Mr. A. Kanagasabai, Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated 30-3-1951; that of the attesting witnesses dated 9-3-1951 and that of the attesting Notary dated 1-6-1951 having been read:

It is ordered that the Last Will and Testament left behind by the said deceased Deogupillai Arulanandam Rasiahpillai dated 5th October 1938 and attested by K. Vinasithamby, Notary Public under No. 25437 and deposited with the Petitioner be and the same is hereby declared proved and that Probate of the said Last Will be issued to the Petitioner Elizabeth Muththammah widow of D. A. Rasiahpillai who is the executrix named in the said Last Will accordingly.

This t5h day of June 1951.

(Sgd.) V. S. JEYAWICKRAMA,
District Judge.

Drawn by
(Sgd.) A. Kanagasabai,
Proctor for Petitioner.




போஷாக்கைக் கொடுக்கிறது

நெஸ்டோமோல்ட்

(மோல்ட்டெட் மில்க்)




தாய்ப்பாலை மறப்பிக்கும் போதும் அதற்குப் பிறகும் குழந்தைகளுக்கு நல்ல போஷாக்கைக் கொடுப்பது.

விட்டாமின் பி 1.

சத்து நிரம்பக்கொண்டது

### மதுபானப் புதியஒழுங்கு

எக்சைஸ் கம்மிஷனரால் கொடுக்கப்படும் பேர்மிற் இல்லாது 21 வயதுக்கு உட்பட்டவர்கள் சாராயமோ, கள்ளோ, அல்லது மற்றெந்த மதுபானப்பொருட்களோ எந்த ஒருஇடத்திலும், எந்தஅளவிலும் வைத்திருக்க அனுமதிக்கப்பட மாட்டார்களென்று மதுபரிபாலன சட்டத்திலே உள்நாட்டு மந்திரியாரால் ஓர் புதிய பிரமாணம் செய்யப்பட்டிருக்கிறது. பெண்கள் பேர்மிற் இல்லாது எந்தஒரு பிரசித்தமான இடத்திலும் சாராயமோ அல்லது கள்ளோ எந்தஅளவில் வைத்திருப்பதும் விலக்கப்பட்டிருக்கிறது.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 12 1951.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org